விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 23 | சனிக்கிழமை | (09.10.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 295

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்
E-mail: thirumurugan@eudoramail.com

## ஐ.தே.க. எம்.பிக்கள் எஸ்.பி, சஜித், நவின் ஆகியோர் மீது ஒழுக்காற்று விசாரணை!

### விசாரணையை கைவிடுமாறு அதிருப்திக்குழு கோரிக்கை

(நமது நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவி வந்த உட்கட்சி முரண்பாடுகள் உச்சக் கட்டத்தை அடைந்த நிலையில் கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் தற்போதைய எம்.பியுமான எஸ்.பி. திஸநாயக்க, மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் மகனும் தற்போதைய எம்.பியுமான சஜித் பிரேமதாஸா, முன்னாள் மகாவலி அபிவிருத்தி அமைச்சரும் அமரர் காமினி திஸநாயக்காவின் புதல்வரும் தற்போதைய எம்.பியுமான நவீன் திஸநாயக்க ஆகியோர் மீதே கட்சியின் தலைமைப் பீடம் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

வெளிநாட்டவர் உள்நாட்டில் காணி வாங்குவதற்கான வரி விதிப்பு சட்டமூல வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமைக்கு விளக்கம் கோரி இந்த மூன்று எம்.பிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குளறுபடியில் முடிந்த பரீட்சார்த்த இலத்திரனியல் முறை வாக்கெடுப்பு

### பாராளுமன்றில் சம்பவம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் இலத்திரனியல் முறை வாக்கெடுப்பு பரீட்சார்த்தமாக பயன்படுத்தப்பட்ட போது அது குளறுபடியான பெறுபேறுகளையே தந்தது.

நேற்று முன்தினம் அவுஸ்ரேலியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு தொடர்பான சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. சட்டமூலத்திற்கு ஆதரவாக 192 வாக்குகள் கிடைத்தன. இதனைத் தொடர்ந்து சபாநாயகர் லொக்குபண்டார இதே வாக்களிப்பை இலத்திரனியல் முறையில் மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

எம்.பிக்கள் தத்தமது மேசையில் பொருத்தப்பட்டிருந்த ஆளியை அழுத்தி வாக்களிக்குமாறு கேட்கப்பட்டனர். எம்.பிக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவல் படையினர் விவகாரம்

# திருகோணமலையில் சூடுபிடிக்கிறது

### சமாதான செயலகப் பணிப்பாளர் அங்கு அவசர விஜயம்

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினரின் நிலை தொடர்பாகவும், சமகால அரசியல் சூழ்நிலைகள் பற்றி ஆராயவும் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால நேற்றுத் திருகோணமலைக்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினர் தொடர்பாக சிங்கள அமைப்பு ஒன்று சுய அரசியல் இலாபத்தை தேடும் வகையில் மேற்கொண்டு வரும் பிரசாரங்களின் மத்தியில் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்று திருகோணமலைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் ஆயுதங்களுடன் ஊர்காவல் படையினர் நடமாடியதாலேயே அவர்களை கைதுசெய்து தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்கும் முயற்சியாக ஊர்காவல் படையினரின் உறவினர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் 50 அடி நீள கட்டவுட்

(திருநெல்வேலி)

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது 50 அடி நீளமான கட் அவுட் ஒன்று பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு முன்பாக வைக்கப்படவுள்ளது.

வடமராட்சி கடற்தொழிலாளர் சங்க சமாசத்தின் ஏற்பாட்டில் இக் கட்டவுட் உருவாக்கப்படவுள்ளது.

தலைவர் வே. பிரபாகரனுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி 50 வயது பூர்த்தியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தலைவர் பிரபாவின் பிறந்த தினத்திற்கு மறுதினமான நவம்பர் 27 ஆம் திகதி தமிழீழ மாவீரர் நாளாகும். அன்றைய தினம் தேசியத் தலைவர் வருடாந்த மாவீரர்தின உரையை நிகழ்த்துவது இங்கு குறிப்பிடத்தக்கது.

(த-43)

## மாதாந்த சந்திப்புக்கள் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவை பேணமுடிபு

### கூட்டமைப்பு - மு.காங்கிரஸ் சந்திப்பில் தீர்மானம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இச் சந்திப்பில் இரு தரப்பினரும் தமக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் வகையில் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின் இறுதியில் இருதரப்பினரும் கால அட்டவணையின்படி மீண்டும் சந்திப்பது என தீர்மானிக்கப்பட்டது.

சந்திப்புக்கான கால அட்டவணையை தயாரிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாபில் சுரேஸ் பிரேமசந்திரனும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் பசீர் சேகுதாவூத்தும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாதாந்தம் இச் சந்திப்பை ஏற்படுத்திக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அடையாள அட்டை சட்ட மூலவிவாதம் சபையில் சர்ச்சையைக் கிளப்பியது

### கஜேந்திரன் எம்.பியைச் சாடினார் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே

(கொழும்பு)

பொதுத் தேர்தல் வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்கும் சட்டமூலம் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதம் நேற்றைய தினம் பாராளுமன்றில் சர்ச்சையை ஏற்படுத்தியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலத்திற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உரையாற்றினார். 'நாய்களுக்கான அடையாளம்' போன்று அடையாள அட்டைகள் தமிழ் மக்களுக்கு ஒரு விலங்கு. அடையாள அட்டை விவகாரங்களினால் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் ஏராளம் எனக் கஜேந்திரன் எம்.பி. உரை நிகழ்த்தியிருந்தார்.

கஜேந்திரன் எம்.பியின் இந்த விவாதம் நேற்றைய சபை அமர்வுகளின்போது சூடுபிடிக்க ஆரம்பித்தது. சபை அமர்வின்போது வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே கஜேந்திரன் எம்.பியின் உரைக்கு கண்டனம் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் குழு நேற்று யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது தேர்தல் கண்காணிப்பு அமைப்பாகிய பவ்ரல் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொண்டிருந்த கண்காணிப்புப்பணிகள் குறித்து மதிப்பீடு செய்யும் பொருட்டு இலங்கையிலுள்ள சுவீடன் தூதுவராலய அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

இவ் அதிகாரிகள் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போது சுவீடன் தூதுவராலயத்தைச் சேர்ந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபா கடனுதவி

## சீன அரசு வழங்குகிறது

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு சீன அரசாங்கம் 500 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு சீனத்தூதுவர் சண் குவோஷியாங், திறைசேரி செயலாளர் பீ.பீ. ஜயசுந்தரவுடன் இதற்கான ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டுள்ளார்.

இது தொடர்பில் சீனத்தூதுக்குழுவொன்று சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர் வூ குவான்ஷெங் தலைமையில் நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்து உரையாடியிருந்தது.

இத் தொகையில் 50 மில்லியன் வரட்சி நிவாரணத்திற்கு பயன்படுத்தப்படும். மீதி அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் இவற்றுள் கலாசார, நீர்ப்பாசன, கிராமிய மின்திட்டங்கள் அடங்கும்.

பிரதமரின் அழைப்பின் பேரில் 50 பேர்கொண்ட சீனத்தூதுக் குழுவினர் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்தனர். இவர்கள் ஜனாதிபதி, சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர் ஆகியோரையும் சந்தித்தனர். பிரத

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றுக்குள் விழுந்து பாலகன் பலி

(புங்குடுதீவு)

பச்சிளம் குழந்தை ஒன்று கிணற்றில் விழுந்து மரணமடைந்துள்ளது.

இப் பரிதாபச் சம்பவம் நேற்றுக் காலை வேலணை 4 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது அதே இடத்தை சேர்ந்த ஒன்றரை வயத

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வாய் துர்நாற்றம்

## ஏன் உண்டாகிறது?

டாக்டர் க.ரவிக்குமார்

வாயிலிருந்து துர்நாற்றம் வீசுவது பலவகைக் காரணங்களால் உண்டாகிறது. பற்களைச் சரியாகத் துலக்காமல் இருப்பதிலிருந்து புற்றுநோய் வரை இந்த அறிகுறி தோன்றலாம். மூக்கு, வாய், நுரையீரல், குடல், வயிறு ஆகியன சார்ந்த நோய்கள், காய்ச்சல், நச்சுத்தன்மை, வளர்சிதை மாற்றம், மனத்தளர்ச்சி எனப் பல நிலைகளில் இது தோனறலாம். பல் சொத்தை, பல் ஈறுகளில வீக்கம், சைனஸ் வியாதிகள், வாய்ப்புண், மூச்சுக் குழலில் அழற்சி ஆகியவறறிலும் இது ஏற்படுகிறது. நுரையீரல் சார்ந்த வியாதிகளில் - குறிப்பாகக் காச நோய், நுரையீரல் புற்று ஆகியவைகளில் வாயிலிருந்து துர்நாற்றம் தோன்றலாம்.

வயிறு மற்றும் ஜீரண உறுப்புகளில் ஏற்படும் கோளாறுகள், புற்றுநோய், மலச்சிக்கல், அஜீரணம், சிலவகை உணவுப்பண்டங்களால் உண்டாகும் வாயு, வயிற்றுப்பூச்சிகள், (Helminths) குடல் புண் ஆகியன துர்நாற்றத்தைப் பேச்சின் போது வெளிப்படுத்தும். வளர்சிதை மாற்றத்தில்-குறிப்பாக அதிகக் காரத்தன்மை, அமிலத் தன்மை, அதிக கொழுப்புள்ள உணவுவகைகளை உண்பது, விஷக் காய்ச்சல், நீரிழிவு நோய், உடலிலுள்ள நீரின் அளவு குறைவது, ஹெர்நிய, சிபிலிஸ், இரத்தப்புற்று, சில மருந்துகளை உட்கொள்வது, ஆகியனவும் காரணங்களாகின்றன. மனத்தளர்ச்சியுடைய நோயாளி தனக்கு இக்குறை இருப்பதாகச் சொல்வார். ஆனால் பிறர் இதனை உணர்வதில்லை. அளவுக்கு அதிகமாகப் பேசுபவர்களுக்கும் இது தோன்றுகிறது. மாறாக சிலர் இதன் காரணமாகத் தாழ்வு எண்ணத்தை வளர்ததுக் கொணடு பிறரோடு பேசவே அஞ்சுவர்.

பொதுவாகக் காலையிலும், இரவிலும் பற்களைத் துலக்குவது நல்லது. இருப்பினும் ஒவ்வொரு முறை உணவு அல்லது பலகாரங்களைச் சா[illegible]ட பின்பும், வாயை நன்றாக நீரில் கொப்பளிப்பது சாலச் சிறந்தது.

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி என்பது முதுமொழி. மென்மையான பற்பொடியைக் கொண்டோ பற்பசையைக் கொண்டோ பற்களைத் துலக்கலாம். பற்களின் இடைவெளிகளில் உணவுத்துகள்கள் ஒட்டிக் கொண்டு, நுண்கிருமிகளை உண்டாக்கித் துர்நாற்றத்தை ஏற்படுத்தும். ஒரு கரண்டி அப்பச் சோடா பவுடரைச் சிறிது நீரில் கலந்து வாயைக் கொப்பளிக்கலாம். இது வாய்ப் பகுதியில் உள்ள அழறசிகளைப் போக்கவும், மணத்தை உண்டாககவும் உதவும். மலச்சிககல் இல்லாமல் பார்த்துக்கொள்வதுடன், குடலில் உண்டாகும் பூச்சிகளுக்கு மருந்து சாப்பிடுவதும் பயன்தரும். □

# திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக இம்முறை நாவாந்துறைப்பகுதி தெரிவு

மத்திய சுற்றாடல் அதிகார சபை உபபிராந்திய யாழ்.மாவட்ட அலுவலகம் இந்த வருடத்திற்கான திணமக்கழிவு முகாமைத்துவத்திற்கு ஏற்ற இடமாக நாவாந்துறைப் பிரதேசத்தை தெரிவுசெய்துள்ளது.

அந்தப் பிரதேசத்தில் உள்ள திணமக் கழிவுகளை அகற்றுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமைப் பீடத்திலிருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இத் திண்மக் கழிவு அகற்றும் நடவடிக்கையில் அப்பகுதி மாணவர்கள், பொதுமக்களினதும், சமூக தொண்டர் நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது.

இச செயற்பாட்டில் ஊடாக நாவாந்துறைப் பிரதேசத்தில் ஒழுங்கற்ற முறையில் வீதிகளில் கொட்டப்படுகின்ற குப்பைகளை அகற்றி குப்பைகளை அவ்விடங்களில் இனிவரும் காலத்தில் கொட்டாதபடி தடுத்து நிறுத்தப்படவுள்ளது.

முறைப்படி கழிவுகளை அகற்றுதல், அதற்கான அறிவித்தல் பலகைகளை நடுதல் மற்றும் திண்மக் கழிவுகளை கொண்டு கூட்டுப் பசளைகளைத் தயாரித்தல் போன்றனவும இச் செயற்திட்டத்தின் மூலம் முனனெடுக்கப்படவுள்ளன. (ந-19)

## கௌரவிப்பு நிகழ்வு

கிளிநொச்சியில் அமைந்துள்ள கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் இளைஞர் யுவதிகளுக்கு கட்ட நிர்மாணத்துடன் தொடர்புடைய சகலவிதமான தொழிற பயிற்சிகளையும் வழங்கிவருகிறது.

இந்த வகையில் முதற்கட்டமாகப் பயிற்சியைப் பூர்த்தி செய்த 300 இளைஞர் யுவதிகளைக் கௌரவிக்கும் முகமாக இன்று சனிக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மணடபத்தில் நிறைவு விழாவொன்று நடைபெறவுள்ளது.

அத்துடன் இந் நிறுவனத்தில் தொழில் வங்கி ஒன்றும் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## உடற்கல்வி டிப்ளோமா முதலாம், இரண்டாம் ஆண்டுப் பரீட்சை 2003/2004

உடற்கல்வி டிப்ளோமா முதலாம் ஆண்டுப் பரீட்சையும், இரண்டாம் ஆண்டுப் பரீட்சையும் 11.10.2004 அன்று ஆரம்பமாக உள்ளதால் மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் காலதாமதமின்றி பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

பதிவாளர்

(c/624)

# தலைவரின் தூரநோக்குச் சிந்தனையே எமது போராட்டத்தின் வளர்ச்சிக்கு காரணம்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை விளக்கம்

(முல்லைத்தீவு)

இரண்டரை ஆண்டு கால சமாதான சூழ்நிலையில் எந்த விதமான இறுதி முடிவுகளும் எட்டப்படாமல் இருப்பதுடன் சமாதானத்தை நோக்கிய நகர்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

“அலைபாடும் பரணி” குறுவெட்டு வெளியீட்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது அவர் இதனைத தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாறறுகையில்,

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இன்னும் எமது மக்கள் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ முடியவில்லை.

எங்களுடைய கடல் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வேற்று நாட்டவர்களும் பெரும்பான்மை இனத்தவர்களும் அத்துமீறி நுழைந்து எங்களுடைய கடல் வளங்களை அள்ளிச் செல்கின்றார்கள்.

கடற்புலி மாவீரர்களின் குறிப்பிட்ட ஒரு பக்கத்தைத்தான் நாங்கள் இன்று வெளிப்படுத்தியிருக்கின்றோம். ஏனைய பக்கங்கள் என்றொரு நாள் அதுவும் எமது தமிழீழத் தேசியத் தலைவரின் காலத்தில் வெளிப்படுத்தப்படும்.

கடற்பரப்பில் வீர காவியமான மாவீரர்களில் நினைவாகவே இந்த அலைபாடும் பரணி உருவாக்கப்பட்டது.

தீர்க்கதரிசனத்தோடும், மதிநுட்பத் தோடும் எமது தலைவர் 30 ஆண்டுகளாக விடுதலைப் போராட்டத்தை நடாத்தி வருகின்றார்.

தலைவரின் தீர்க்க தரிசனம், மதிநுட்பம், தூரநோக்குப் பார்வையில் உருவாக்கப்பட்டது தான் கடற்புலிகள் அணி.

உலகத்தின் எந்தவொரு விடுதலைப் போராட்ட அமைப்பும் கொண்டிருககாத ஒரு கடல் அணியை உருவாக்கி இன்று சர்வதேச ரீதியாக சமபலத்தோடு பேசுகின்ற அளவுக்கு உலகத்தினுடைய வல்லரசு என்று தம்மைக் கூறிக் கொள்கின்ற அந் நாட்டவர்களுக்கு ஒரு சவாலாக கடற்புலிகள் வளர்ந்து நிற்கின்றார்கள்.

இதற்கு தலைவர் அவர்களால் நீண்ட தூரப் பார்வையோடும் தீர்க்க தரிசனததோடு உருவாக்கப்பட்ட கடறபுலிகள் அணியே காரணமாகும். எங்களுடைய இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதாகவிருந்தால் நாங்கள் எங்களுடைய சொநதக் காலில் நின்று எமது போராட்டத்தை முன்னகர்த்த வேண்டும எனவும் தெரிவித்தார். (ந-121)



சுவீடன் தூதராலயத்தில் இருந்து வருகை தந்திருந்த லெனாட்பெக் மற்றும் பீற்றர்றெயல், கலாநிதி கீத பொன்கலன் ஆகியோர் நேற்று அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் தலைவர் ரி.சிறிசக்திவேலைச் சந்தித்துக்கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

# தேசியப் பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக விளங்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி !

## கல்வி அமைச்சின் செயலாளர் பாராட்டு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் யுத்தம் இடம்பெற்ற அமைதி சீர்குலைந்து இருந்தபோதும் அதன் கல்விச் செயற்பாடுகளில் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. என்பதற்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உட்கட்டுமானப் பணிகள் சான்றுபகர்வனவாக உள்ளது எனறு கல்விப் பணிப்பாளர் கீகனகே யாழ்.மத்திய கல்லூரியையும் அதன அதிபரையும் பாராட்டிப் பேசியுள்ளார்.

நாட்டில் உள்ள 324 தேசியப் பாடசாலைகளின் உள்ளகத் திருத்த வேலைகளுக்கென ஒரு இலட்ச ரூபா வழங்கும் வைபவத்திலேயே கல்விப் பணிப்பாளர் கீகனகே இவ்வாறு பாராட்டிப் பேசியுள்ளார்.

கொழும்பில் உள்ள கல்வி அமைசசின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

தேசியப் பாடசாலைகளின் உளளகத்திருத்தப் பணிகளை மேற்கொள்வதறகு முன்னர் அப் பாடசாலைகளின் அதிபாகள் யாழ். மத்திய கல்லூரியின் உட்கட்டமைப்பைச சென்று பார்வையிடவேண்டும்.

யாழ். குடாநாட்டில் யுத்தம் நடைபெற்றபோதும் யாழ்.மததிய கல்லூரி வளாகத்தின் பல பகுதிகள் அழகாகக் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்றும் கீகனகே தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரிகளின் வளாக சுற்றாடலும், உட்கட்டுமான அழகுக் காட்சிகளும உள்ளடக்கி எடுக்கப்பட்ட வீடியோ படம் ஒன்று காட்டப்பட்டது. இதனை அடுத்து இப் படத்தினைப் பார்வையிட்ட கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி திருமதி தாராடி மெல் யாழ். மத்தய கல்லூரியையும் அதன் அதிபரையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார். (ம)

# தமிழ் இலக்கியப் பெருவிழா இன்று கோலாகல ஆரம்பம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் தமிழ் இலக்கியப் பெருவிழா இனறு முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரி அரங்குகளில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.


இன்று காலை 9 மணி முதல் மதியம்ஒரு மணிவரை ஆய்வரங்கு நடைபெறும். வடக்கு, கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய விழாவின் மாலை நிகழ்வுகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இதில் முதன்மை விருநதினராக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். பல்கலைககழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச செயலாளர் எஸ். மகாலிங்கம், யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சங்கீத பூஷணம் தமிழிசை நமசிவாயம் அரங்கில் மங்கள விளக்கேறறலுடன் ஆரம்பமாகும். இன்றைய மாலை நேர நிகழ்வில் முதலில் தமிழ தாய்க்கு மாலை அணிவித்தலைத தொடர்ந்து இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் தமிழ்த் தாய் வணக்கம் இடம்பெறும். அதன்பின் நல்லூர் பிச்சையப்பா ராஜி குழுவினரின் மங்கள இசையும் இடம்பெறும். வரவேற்புரையை அடுத்து விழாத் தலைவர் விசாகலிங்கத்தின் தலைமை உரையும் அடுத்து சூழலும் சொற்போர், பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினர் வழங்கும் நடன அரங்கும், முள்ளியவளை தமிழ் வித்தியாலயம் வழங்கும் பண்டார வன்னியன் நாட்டுக் கூத்தும இடம்பெறும்.

முதன்மை விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து அக்கரைப்பற்று முஸ்லிம் கலைஞர்கள் வழங்கும் ‘ரபான்’ இசையும் யாழ் திருமறைக் கலாமன்றம் வழங்கும் ‘சத்திய வேள்வி’ எனும் இசை நாடகமும் நடைபெறும்.

இறுதியாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினரின் இசைக் கோல நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து தமிழ் மொழி வாழ்த்துடன் முதல் நாள் விழா இனிதே நிறைவுபெறும். (ந-07)





கடந்த கால யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நேற்றைய தினம் அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதி உதவியுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. பயனாளி ஒருவருக்கு யாழ். மாவட்ட அரசு அதிபர் செ. பத்மநாதன் தையல் இயந்திரத்திற்கான பத்திரத்தை வழங்குவதையும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-சிவசங்கர்)

## வாக்களிப்பில் அடையாளஅட்டை நடைமுறை மூலம்

# தமிழர்களின் இறைமை பறிக்கப்பட்டால் தனித் தமிழீழம் அமைவதை தவிர்க்கமுடியாது

## பாராளுமன்றத்தில் சிவனேசன் எம்.பி.ஆவேசம்

(கொழும்பு)

**இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து மாறி மாறி ஆட்சி நடாத்திய அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக அடக்குமுறைகளை மேற்கொண்டு வருகின்றன.**

**இதற்கமைய தேர்தல் வாக்களிப்பின் போது வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் நடைமுறைகளினால் தமிழ் மக்களின் இற்றமை பறிக்கப்படுமானால் தனித் தமிழீழம் ஒன்று உருவாவதைத் தவிர்க்க முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப பாராளுமன்ற உறுப்பினா சிவனேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.**

தேசிய அடையாள அட்டையை வாக்களிப்புககுப் பயன்படுத்துவது தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்



றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

கடந்த 1989ஆம் ஆண்டில் தேசிய அடையாள அட்டை ஒரு நபருக்கு வழங்கவேண்டும் என்கிற சட்டம் அமுலுக்கு வந்தது. ஆனால் இதுவரை காலமும் எந்தவொரு அரசும் இதனை நடைமுறைப்படுத்தவில்லை.

கடந்த முப்பது வருடகாலமாக தேசிய அடையாள அட்டையை வழங்கிய காலத்தில் இருந்து தமிழர்களை அடக்கி, ஒடுக்கி எங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு பிடிவிறாந்தாகவே இந்தத் தேசிய அடையாள அட்டையை நாங்கள் கருதுகின்றோம்.

### பொய்யாகிப் போன வாக்குறுதிகள்

இலங்கை மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றதா? என்றால் இந்த அரசிடம் அந்தத் தன்மையை காண முடியாமல் இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி தேர்தலில் போட்டியிட்ட போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் பதவிக்கு வந்த பின்னரும் இதுவரை நிறைவேற்றப்படுவதாக இல்லை. அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும் என அரசு உறுதி கூறிய போதும் அது இன்னமும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை.

விலைவாசி ஏற்றம் இன்று அதிகரித்திருக்கின்றது. எரிபொருளின் விலை அதிகரித்துள்ளது. மக்களின வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. இதனால் எங்கும் மக்களின் போராட்டம் மலிந்து காணப்படுகின்றது.

### கூட்டமைப்பின் கோரிக்கை

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு வழங்கிய ஆணையை அடிப்படையாகக் கொண்டு வடக்கு-கிழக்குககான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஆனால் அதற்கான எந்தவொரு முயற்சியினையும் இவ் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. இதனால் எங்களுடைய பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோர் மற்றும் புலம் பெயர்ந்தோர் இயல்புவாழ்க்கை நிலையினை அடைய முடியாமல் திணறுகின்றார்கள்.

### வாக்களிப்பில் அ.அட்டை; தமிழ்மக்களின நிலைப்பாடு

வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு என்பது மிக மிக மநத கதியிலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கம் தேசிய அடையாள அட்டையை வாக்களிப்புக்குக் கட்டாயம் பயன்படுத்துவது குறித்த சட்ட மூலம் பற்றிச் சிந்திப்பதை மிகவும் இழிவான செயலாகவே தமிழ்மக்கள் கருதுகின்றனர்.

இருப்பினும் தற்போது இலங்கையில் 30சதவீதமான மக்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லாதிருக்கின்றது. குறிப்பாக 3.8 மில்லியன் மக்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கவேண்டிய நிலை இருக்கின்றது.

இந்நிலையில் இந்த 80சதவீத மானவர்களும் தமிழ்பேசும் மக்களாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வாககளிப்பில் அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்த முன்னர் தமிழ் மக்களின் நிலையினை அரசு கவனிக்க வேண்டும். யுத்த நடவடிக்கைகளினால் யாழ்.மாவட்டத்தில் இருந்து வன்னிக்கும், புத்தளத்திற்கும் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகச் சென்றனர். இந்தியாவுக்கு புலம்பெயர்ந்து சென்றார்கள். இவ்வாறுதான் தமிழ்மக்களின் வாழ்க்கைப் பயணம் சீரற்றுக் காணப்படுகிறது.

கடந்த 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பலர் இன்றும் கூட பிறப்பத்தாட்சிப பத்திரம் இல்லாத நிலையில் தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இவற்றுக்குச் சரியான தரவுகளை இந்த அரசு பெறமுடியாத நிலையில் உள்ளது. அப்படியானதொரு சூழ்நிலையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பிரதேசங்கள் பல தமிழ்ப பிரதேசங்களாகவே காணப்படுகின்றன.

எனவே,இவ்வாறானதோர் சூழ்நிலையில் இவ் அரசாங்கம் சரியான கணிப்பீடுகளை மேற்கொள்ள தவறியிருக்கின்றது. அத்துடன் இதனைச் செய்ய முடியாத நிலையிலும் அரசு இருக்கின்றது.

### சுற்றுநிருபத்தின் நிபந்தனைகள

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களோடு மாத்திரமல்லாது குறிபபாக மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டாலும் வாக்காளர் அட்டைகளை பதிவு செய்வதற்கு கிராம சேவையாளர்களுக்கு வழங்கிய அரச சுற்றுநிருபத்தில் காணப்படுகின்ற நிபந்தனைகள் தடையாகவுள்ளன.

தமிழ் பேசுகின்ற முஸ்லிம் சமுதாயம் கூட இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், தற்காலிக குடிசைகளிலும் புகலிடம் தேடி வாழ்ந்து வருகின்றது. அச சமூகததின் தரவுகளைச் கூட ஒழுஙகாகப் பெறமுடியாத நிலையிலேயே அரசு இருந்துவருகிறது.

சரியான புள்ளிவிபரங்களைத் தயார்ப்படுத்தி திட்டமிட்டுச்செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் தேசிய அடையாள அட்டைகளை அனைத்து மக்களுக்கும் ஒரு வருடத்திற்குள் வழஙகுவது என்பது சாத்தியமானதல்ல.இந்த அரசினை நாங்கள் நம்பத் தயாராகவும் இல்லை.

எனவே, தேசிய அடையாள அட்டையினை வழங்கிய பின்னர், வாககளிப்பில் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டத்தைக் கொண்டுவருவது தான் முறையானது. தேசிய அடையாள அட்டையினை வழங்குவதால் மட்டும், கட்டுப்பாடுகளைக் கொண்டு வரமுடியாது.

கடந்த 1988,1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் தேசிய அடையாள அட்டைகளை ஜே.வி.பியினர் பறித்த பல சம்பவங்கள் இந்த நாட்டில் நடைபெற்றிருக்கின்றன.

எனவே, இந்தத் தேசிய அடையாள அட்டையை வாக்களிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்ற வேளையில் யாராவது பறிக்கப்படக்கூடிய நிலைமை கூட எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்படலாம்.

கடந்த காலத் தேர்தலில் கூட இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறறிருக்கின்றன. தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவர்கள் கூட வாக்களிப்புக்குச் சென்ற இடத்தில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறான நிலைமை நாட்டில் இருக்கின்றபோது தேசிய அடையாள அட்டையை வாக்களிப்புக்குக் கட்டாயமாக்கினால் என்ன இலாபம் கிடைக்கப்போகின்றது.

### அரசின் உள்நோக்கம்

தேசிய அடையாள அட்டையை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏதோ ஒரு உள்நோக்கம் அரசாங்கத்திடம் இருக்கின்றது. ஒன்று தமிழ்பேசும் இனத்தினுடைய பிரதிநிதித்துவத்தைக் குலைக்கும் நோக்கமாக இருக்கலாம். அல்லது தமிழ்பேசும் இனம் எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளிக்கும் என்ற பயமாக இருக்கலாம். மேலும் தமிழ் இனம் அடையாள அட்டையினால் பெற்றுவரும் துன்பத்தை அதிகரிப்பதாகவும் இருக்கலாம்.

### தமிழரின் இயல்பு வாழ்வுக்கு தமிழீழமே சிறந்த தீர்வு

வாக்களிப்பில் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் நடைமுறைக்கு வந்து, அதனூடாக தமிழினத்தினுடைய இறைமைகள் பாதிக்கப்படுமேயானால் இதற்கு எதிராக தனித்தமிழீழம் உருவாவதைவிட எமக்கு வேறுவழி இல்லை.

அந்தத் தமிழீழத்தில், தமிழ் பேசுகின்ற மக்கள் சிறந்த உரிமையுடனும், சுதந்திரத்துடனும் வாழககூடிய ஒரு நல்வாழ்வை எங்களுடைய தேசியத் தலைவருடைய காலத்திலேயே நாங்கள் அமைப்போம் எனவும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.(ரு-121)

## நவம்பர் மாதம் முதல் ஆசிரியருக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் சம்பள உயர்வு வழங்கப்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கல்வியமைச்சின் முன்னால் கடந்த புதன்கிழமை ஆசிரியர்கள் நடாத்திய போராட்டத்தையடுத்து நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்த உறுதி மொழியை கல்வியமைச்சின் செயலாளர் தாராடி மெல் வழங்கினார்.

ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்ற விடயம் நிதியமைச்சுக்கு உரியமுறையில அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ரு-121)


அன்பு மாணவர்களே!

எதிர்வரும் 14.10.2004 அன்று

நவராத்திரி பூசை

ஆரம்பமாவதையொட்டி

'கவிதை மாலை'

பகுதியை வலம்புரி வெளியிடவுள்ளது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம்பெறவேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கறகும்தரம், மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்,

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம். (ஆ-ர்)



விவாத அரங்கு - 6

விடயம்

மதமாற்றத் தடைச் சட்டம்

தேவையானதா?

தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

# அஞ்சலகங்களில் வைப்புச் செய்வோருக்கு பிரமாண்ட பரிசுத் திட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

உலக சிக்கன தினத்தை முன்னிட்டு தபாலகங்களில் வைப்புச் செய்தவர்களுக்கான பிரமாண்டமான பரிசுத் திட்டம் ஒன்றை உலக அஞ்சல் தினமான இன்று முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை அஞ்சல் திணைக்களமும் தேசய சேமிப்பு வங்கியும் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளன.

இதன்படி அஞ்சல் ஊழியர்களுக்கு தேசிய மட்டத்தில் 3 பணப் பரிசில்களும் மாவட்ட மட்டத்தில் 28 பரிசில்களும் வழங்கவுள்ளன.

இதற்காகத் தெரிவு செய்யப்படுவோரின் விபரங்கள் ஒக்டோபர் 31 ஆம் திகதி உலக சிக்கன தினத்தன்று தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

தபால் நிலையங்களில் அல்லது உபதபால் நிலையங்களில் இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதிவரை பணவைப்புப் புத்தகத்தில் 100 ரூபா அல்லது அதற்கு அதிகமான தொகையை வைப்புச் செய்தால் இப்போட்டியில் நுழைவதற்கான அனுமதியைப் பெறுவர்.

இதற்கான முதலாவது பரிசாக 7 இலட்சம் ரூபா பெறுமதியான மாருதிக்கார் ஒன்றும், இரண்டாவது பரிசாக 1 இலட்சம் ரூபா பணப்பரிசும் மூன்றாவது பரிசாக ஒவ்வொன்றும் 50 ஆயிரம் ரூபா கொண்ட 3 பணப் பரிசுகளும் வழங்கப்படும்.

தேசிய மட்டத்தில் சிறந்த அஞ்சலகமாகத் தெரிவு செய்யப்படும், அஞ்சலகத்திற்கு 1 இலட்சம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் அதேவேளை தெரிவு செய்யப்படும் முதலாவது சிறந்த உபஅஞ்சல் அலுவலகத்திற்கு 50 ஆயிரம ரூபாவும் 2ஆவது அஞ்சல் அலுவலகத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும், 3 ஆவது உபஅஞ்சல் அலுவலகத்திற்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், மாவட்ட ரீதியாக முதலாவதாகத் தெரிவு செய்யப்படும் அஞ்சலகத்திற்கு 15 ஆயிரம் ரூபாவும், 2 ஆம் இடத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும், 3 ஆம் இடத்திற்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார். (ர)

## தேர்தல் முறைகேடுகளை இல்லாதொழிக்க சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைக்குமாறு ஐ.தே.க. வலியுறுத்து

(கொழும்பு)

தேர்தல் முறைகேடுகளை இனிமேலாவது ஆட்சியில் உள்ள கூட்டமைப்பு அரசாங்கம் உடன் நிறுத்தவேண்டும். இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவானது உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மற்றும் பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திகா குமாரதுங்க சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவை உருவாக்குவதில் காலம் தாழ்த்திவருகிறார். இதன் மூலம் அவரின் தாமதமானது இவ் ஆணைக்குழுவை அமைக்க அவர் மறுப்பதையே எடுததுக்காட்டுகின்றது.

தேர்தலின் போது தேசியஅடையாள அட்டை பயன்படுத்துவதைக் கட்டாயமாக்கும் சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் 38 இலட்சம் மக்களின் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையினால் எதிர்க்கட்சிகளின் பலம் அனைவருக்கும் தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றது. இதனை ஆளும் கூட்டமைப்பு அரசாங்கமும் உணர்ந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-121)

## இலவச பரிசோதனை

(கோண்டாவில்)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்பாணக் கிளை இன்று சனிக்கிழமை இலவசமாக காது, கண், தொண்டை பரிசோதனை ஒன்றை நடாத்தவுள்ளது.

காலை 9.00மணியில் இருந்து மாலை 3.00மணிவரை நடைபெறும் இம் மருத்துவ முகாமில் சம்பந்தப்பட்டவர்கள் பங்குபற்றிப் பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-130)

## அஞ்சல் தினவிழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அஞ்சல் தினவிழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதி அஞ்சல்மா அதிபர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் மக்கள் வங்கியின் உதவிப்பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ர-8)

# எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதில் முன்பள்ளி ஆசிரியரின் பணி முக்கியமானது

## அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் சிறுவர்களின் எதிர்காலம் நன்றாகவே இருக்கவேண்டும் என்பதனையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுவருகின்றது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்தில் ஆசிரியர்தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முதல் முறையாக மூவினத்தைச் சேர்ந்த சுமார் 250றகும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதில் முன்பள்ளி ஆசிரியர்களின் பணி மிகவும் முக்கியமானது. எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவது இவ் ஆசிரியர் குழாம் தான் எனத் தெரிவித்தார். (ர-121)

## ஒரேசூலில் பிறந்த 5 குழந்தைகளுக்கு சுகாதார அமைச்சு உதவி

(கொழும்பு)

பேராதனை பிலியந்தலாவையைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரே பிரசவத்தில் பெற்றெடுத்த ஐந்து குழந்தைகளுக்கும் சுகாதார அமைச்சு உதவி வழங்கவுள்ளது.

இதன்படி, இந்தக் குழந்தைகள் 5 வயதை அடையும் வரை பால்மா கொள்வனவிற்கென ஒவ்வொரு மாதமும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் 5 ஆயிரம் ரூபாவைக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வைத்தியசாலைக்குச் சென்று தாயையும் குழந்தைகளையும் அமைச்சர் பார்வையிட்டார். இதன்போதே இக் குழந்தைகளுக்கு உதவி வழங்குவதாக அவர் உறுதியளித்தார். இவர்களுக்கான நிதியுதவியை சுகாதார அபிவிருத்தி நிதியத்தினூடாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ர)

## புலிகள் – படையினருக்கு இடையில் அடுத்த சந்திப்பு 30 ஆம் திகதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் இடையிலான அடுத்த சந்திப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இருதரப்பினருக்கும் இடையில் வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் இடம் பெற்ற சந்திப்பிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர-121)

# எரிவாயுச் சாதனம் வெடித்து மாணவர் பலி

சேலம் பள்ளிக்கூடம் ஒன்றில் அறிவியல் கண்காட்சியின் போது சாணம் எரிவாயுச் சாதனம் வெடித்ததால் மாணவரொருவர் பிரிதாபமாக உயிரிழந்தார். மேலும் ஒரு மாணவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச் சம்பவம் தொடர்பாகத் தலைமை ஆசிரியர் உள்ளிட்ட மூன்று ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சேலம் சூரமங்கலத்தில் உள்ள நீலாம்பாள் சுப்பிரமணியம் மேநிலைப்பள்ளி அறிவியல் கண்காட்சியையொட்டி நேற்றுமுன் தினம் காலை 8 மணிக்கே களைகட்டத் தொடங்கியது. விதவிதமான அறிவியல் படைப்புகளுக்கிடையே பிளஸ் II மாணவர்களான கண்ணனும் கலையரசனும் சாணத்தைக் கொண்டு எரிவாயு தயாரிக்கும் கொள்கலனை காட்சிக்கு வைத்திருந்தனர்.

இவர்கள் இருவரும் அதனை இயக்கியபோது சாணம் அடைக்கப்பட்டிருந்த பெரிய கொள்கலன் திடீரென வெடித்துச் சிதறியது.

இதனால் தூக்கியடிக்கப்பட்ட மாணவர்கள் இருவரில் கண்ணனின் முகம் முழுக்கச் சிதைந்து போனது. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் கண்ணன் உயிரிழந்தார்.

ஆனால் கண்ணனைச் சிகிச்சைக்குக் கொண்டு செல்வதைத் தாமதப்படுத்தியதாக ஆசிரியர்கள் மீது புகார் கூறி மாணவர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

படுகாயமடைந்த மற்றுமொரு மாணவனுக்குத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

சேலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச்சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார் பள்ளித் தலைமையாசிரியர், உதவித் தலைமையாசிரியர், கண்காட்சி ஒருங்கிணைப்பு ஆசிரியர் ஆகிய மூவரையும் கைது செய்துள்ளனர். (து)

## தூய்மையான மனதை அச்சம் நெருங்காது தமிழக அரசு பற்றிக் கருணாநிதி பதில்

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் 7 எம்.பிகள் குழு டில்லியில் ஆற்றிய பணிகளுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

குப்புசாமி தலைமையிலான இக குழு பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் சோனியாகாந்தி, மத்திய அமைச்சர்களைச் சந்தித்துச் சென்னையில் நடைபெற்ற எம்.பி.கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி வேண்டுகோள்விடுத்ததை, செய்தியாளர்களின் ஒருகேள்விக்குக் கருணாநிதி அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

அத்தீர்மானங்கள் உறுதியாகக் கவனிக்கப்படுமென்று டில்லியில் வாக்களிக்கப்பட்டிருப்பதைக் கண்டுகளிப்படைவதாகத் தெரிவித்துள்ள அவர் காரியங்களும் இந்த வேகத்தில் நடைபெறுமென எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளார்.

சில முக்கியமான பிரசித்தி பெற்ற வழக்குகளில் சி.பி.ஐ. விசாரணையை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றம் வரை வாதாட முனைந்தது குறித்த கேள்விக்குப் பதிலளித்த கருணாநிதி, எங்கு மனம் தூய்மையாக இருக்கிறதோ அந்த மனத்தை அச்சம் நெருங்காது என்றும் தூய்மையற்றவைகள் துணிவற்றவையாகத்தான் துடித்துத்துவள நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (து)



அன் சுமன் செர் இ கல்ஃபரோஷன் அமைப்பினர், குடியரசுத் தலைவர் அப்துல்கலாமைச் சந்தித்த போது அலங்காரப் பதாகையொன்றை அவருக்குப் பரிசாக அளித்தனர்.

# அசாம் நிலச்சரிவில் 17 பேர் பலி

அசாமில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் 17 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அசாமில் நேற்றுமுன் தினம்முதல் பெய்து வரும் இடைவிடாத மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.



தலைநகர் கவுகாத்தியின் மலைப் பாங்கான புறநகரில் அமைந்துள்ள ஒடல்பக்ரா பகுதியில் உள்ள ஜியோடிகுசி என்ற இடத்தில் நேற்று கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

அந்த நிலச்சரிவில் புதையுண்டு 17 பேர் வரை பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அங்கு முழுவீச்சில் மீட்பு பணிகள் நடைபெற்று வருகினறன. இதுவரை இரண்டு பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. (து)

# இந்தியச் செய்திகள்



கொரியாவின் வணிகம், தொழில் மற்றும் சத்தித்துறை அமைச்சர் லீ.ஹீ- பியோம், இந்தியாவின் பெற்றோலியம் இயற்கை வாயு அமைச்சர் மணிசங்கர் ஐய்யரை சந்தித்துப் பேசினார்.

# இன்று ஒரு தகவல்

## அளவும் அனுசரிப்பும்

ஒரு ஊரில் ஒருவன் இருந்தான். தையல் கடை வைத்திருந்தான். அவனிடம் ஒருவன் சட்டைத துணி எடுத்துக் கொடுத்து தைக்கச் சொல்லியிருந்தான்."வரும் சனிக்கிழமை வா... வந்து வாங்கிச் கொண்டு போ" என்றான் கடைக்காரன்.

அதே மாதிரி ஒருவன் வந்தான். அவன் தைத்து வைத்திருந்த சட்டையைக்கொடுத்தான். இவன் அதை வாங்கி அங்கேயே போட்டுப்பார்த்தான். கையின் நீளம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது. வலது கை இடதுபக்கத்தை விட நீளம் குறைவாக இருந்தது.

அவன் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டான். "எனன இது இப்படித் தைத்து விட்டாயே!" என்று. இதற்கு அவன் சொன்னான் 'அட இதற்காகவா சங்கடப்படுகிறீர்கள். வலது கையை மட்டும் சிறிது உள்ளே இழுத்தது போல் வைத்துக் கொண்டால சரியாகிவிடும். எவ்வளவு அற்புதமாக தைத்திருக் கிறேன் பாருங்கள். ஒரு சிறு குறையை பொருட்படுத் தாதீர்கள், நான் சொனனது போல் கையைக் கொஞ்சம் உள்ளே இழுத்து வைத்துககொண்டு போங்கள்' என்றான்.

அவனும் யோசித்துப் பார்த்தான் சரியான யோசனையாகத் தோன்றியது. கொஞ்சம் முயற்சி செய்து வலது கையை உள்ளே இழுத்து சட்டை சரியா இருப்பது போல் செய்துவிட்டான். இப்போது மீண்டும் ஒரு பிரச்சினை. வலது கையை உள்ளே இழுத்தது போல் வைத்ததும் முதுகுட் பக்கம் துணி தளர்வாக இருப்பது போல் தோன்றியது. "என்ன இது ! முதுகுப் பக்கம் துணி தளர்ந்து விட்டதே" என்றான்.

அவன் மீண்டும் ஆரம்பித்தான் 'இதற்காகவா கவலைபடுகிறாய்? உடலை அதற்கேற்றாற் போல் சிறிது வளைத்துக்கொண்டால் சரியாகிவிடும். இதற்கான அந்த அழகிய தையலைப் பிரித்து அதிலுள்ள கலையம்சத்தைக் கெடுக்க என் மனம் இடம் தரவில்லை! எவ்வளவுக்குத் தளர்வாக இருக்கிறதோ அவ்வளவுக்குக் கொஞ்சம் உடலை வளைத்துக்கொள் போதும்" என்றான்.

அதுவும் நல்ல யோசனையாகப்பட்டது இவனுக்கு. சரி என்று கூறிவிட்டு புறப்பட்டான். தெருவில இறங்கினான். கையைக் கொஞ்சம் உள்ளே இழுத்தான் உடம்பைக் கொஞ்சம் வளைத்துக் கொண்டான். சட்டைக்கு ஏற்றாற் போல் செய்து கொண்டு மெதுவாக நடந்து சென்றான்.

இப்போது எதிரில் இன்னொருவன் வந்தான். இவனைப் பார்த்தான். இவன் போட்டிருக்கும் சட்டை யைப் பார்த்தான். "ஆகா! அற்புதம்" என்றான். "சும்மா சொல்லக்கூடாது மிகவும் நன்றாக உள்ளது நிச்சயமாக இது இந்த ஊரின் மேற்கு வீதியிலுள்ள கடைக்காரன் தைத்ததாகத் தானிருக்கவேண்டும் என்றான்.

இதைக் கேட்டதும் அவனுக்கு ஆச்சரியம் "எப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்?"என்று கேட்டான் இதற்கு அந்த வழிப்போக்கன் சொனனான்" அவன் மிகவும் கெட்டிக்காரன் உங்களை மாதிரி உடலும் கையும் வளைந்து போன ஒரு ஆளுக்கு அவனைத் தவிர வேறுயாராலும் இவ்வளவு பொருத்தமான சட்டையைத் தைக்க முடியாது என்றான்.

பாருங்கள் அவனுக்காக இவன் அனுசரிக்கப் போய், இவனது நிலைமை எப்படி ஆகிவிட்டது பாருங்கள். இதேபோலத்தான் சில சடங்குகளும சம்பிரதாயங்களும் நம்மைக் கோமாளியாக்கி விட்டுவிடும். எதுவாக இருந்தாலும் அதில் அறிவுபூாவமான அணுகு முறை அவசியம்.

ஒருதாதி அவசரமாக ஓடி வந்து டாக்டரிடம் சொன்னார் "டாக்டர் ! பத்தாம் நம்பர் கட்டிலில இருக்கும் நோயாளிக்கு காலில் சத்திரசிகிச்சை செய்வதற்குப் பதிலாக தையல் செய்துவிட்டீர்கள். தையல சிகிச்சை செய்யவேண்டிய நபர் ஏழாம் நம்பர் கட்டிலில் இருக்கிறார் என்றாராம்.

அதற்கு இவர் பதற்றப்படாமல் "பரவாயில்லை இவரைத்தூக்கி ஏழாம் நம்பர் கட்டிலில் போட்டு விடு" என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இலங்கைவாழ் அனைத்து இனங்களினதும் உரிமைகளை புலிகள் மதித்து நடக்க வேண்டும்

## சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் கோரிக்கை

(ஜெனீவா)

**சர்வதேச மற்றும் [illegible] மனிதவுரிமைப் பிரகடனங்களை மதித்து நடப்பதில் தமக்குள்ள அர்ப்பணிப்புககளை வெளிப்படுத்துமாறு மூன்று சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் ஜெனீவாவிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.**

சர்வதேச பொது மன்னிப்புச்சபை, மனித உரிமைகள கண்காணிப்பு அமைப்பு மற்றும் வீரர்களுக்கான சர்வதேச ஆணைக்குழு ஆகிய அமைப்புக்களே விடுதலைப்புலிகளிடம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன.

அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாது காப்பதற்குத் தமக்குள்ள முழு ஆற்றலையும், அர்ப்பணிப்புக்களையும் விடுதலைப்புலிகள் அமைப்பு வெளிப் படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருப்பதாக வீரர்களுக்கான சர்வதேச ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் நிக்கலஸ் ஹோபின் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களைச் சுட்டிக் காட்டிய மேற்படி அமைப்புப் பிரதிநிதிகள், தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்றவகையில் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் அவர்களை வலியுறுத்தினர்.

இவ்வாறான சம்பவங்களினால் இலங்கையில் அச்ச மூட்டும் ஓர் சூழ்நிலை காணப்படுவதாகவும், இந்நிலை இனப்பிரச்சினைக்கு நிலையானதும், அமைதியானதுமான ஓர் தீர்வை எட்டுவதில் பல்வேறு சிக்கல்களை உருவாக்கும் எனவும் சர்வதேச பொது மன்னிப்புச் சபையின் பிரதிநிதி எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அச்சுறுத்தலாக விளங்கும் அரசியல் படுகொலைகளை நிறுத்துவதற்காகவும், விடுதலைப் புலிகள அமைப்பு மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் தமது அமைப்பு விரைவில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ற)

# விடுதலைப் போரில் வீரதீரச் செயல் புரிந்தமையால் தமிழீழப் பெண்களை சர்வதேசம் உற்றுநோக்குகிறது

## குயிலின்பன் உரை

(தம்பிலுவில்)

தமிழீழப் பெண்கள் இன்று சர்வதேச சமூகத்தால் உற்றுநோக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது தமிழீழ விடுதலைப் போரில் அவர்கள் ஆற்றிய வீரதீரச் செயல்களாகும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தம்பிலுவில் நடைபெற்ற மகளிர் எழுச்சி சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமூக மற்றும் தேச விடுதலை என்பவற்றில் பெண்கள் பங்கேற்கும் போதே பெண்விடுதலையினைப் பெறமுடியும்.

கப்டன் அங்கயற்கண்ணி கடற்கரும்புலியாகத் தாக்குதல் நடாத்தி இலங்கைப் படையினரைத் திகைக்க வைத்தமை மற்றும் ஜெயசிக்குறு போரில் தமிழீழப் பெண்கள் சோர்வற்ற நிலையில் வீரமுடன் போராடியமை போன்றவையே இன்று தமிழீழப் பெண்கள் முன்னிலைப்படுத்தப்பட உதவியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-121)

# இராசி பலன்

**09.10.2004 (புரட்டாதி 23, சனிக்கிழமை)**
**தசமி முற்பகல் 7.42மணிவரை**
**ஆயிலியம் மு.இ 11.36மணிவரை**
**இராகுகாலம் 9.02 -10.32 மணிவரை**
**சுப நேரம் 3.02-4.32 மணிவரை**
**4வது புரட்டாதிச் சனி**

**மேடம்**
அமைதிக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், மாதாசுகம்.

**இடபம்**
கூட்டுமுயற்சி, மாதர் நட்பு, தனலாபம், போசன சுகம்.

**மிதுனம்**
மனோசங்கடம், கௌரவக் குறைவு, ரோகநிலை, பணவிரயம்.

**கடகம்**
சயனசுகம், விருந்துபசாரம், காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு.

**சிங்கம்**
உறவினர் மனஸ்தாபம், தொழில் சிந்தை, பிரயாணம், பிறருக்கு உதவுதல்.

**கன்னி**
நண்பர்கள் சந்திப்பு, பாராட்டு, முயற்சி கைகூடும், பொருள் சேர்ககை.

**துலாம்**
அறிஞர்கள் சந்திப்பு, நல்லமுயற்சி, பிறருக்கு உதவுதல், புதிய தகவல்.

**விருச்சிகம்**
சரீரப் பிரயாசை, வயிற்றுக்கோளாறு, நிர்பந்திக்கப்படல், தந்தைவழி உறவு.

**தனுசு**
பொருள் விரயம், கலகம், உறவினர் வெறுப்பு, முழங்கால் வலி.

**மகரம்**
களஸ்திர நன்மை, புதியதகவல், பணவருவாய், பிரயாண நன்மை.

**கும்பம்**
முயற்சி கைகூடும், தேகநலன், மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**
அஜீரணரோகம், முயற்சிதாமதம், சோம்பல் நிலை, பணவிரயம்.

*(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)*
*-வளவன்.*

# சீன கம்யூனிஸ்ட் உறுப்பினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்

(கொழும்பு)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய அரசியல் பணியக நிலையியல் குழு உறுப்பினர் ஊக்குவால் நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபகஷவின் அழைப்பின் பேரிலேயே இவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இவரது இவ்விஜயத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கையின் தரப்பில் பல அமைச்சர்களும், அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்கள்.

மேற்படி சந்திப்பின் போது இரு தரப்பு உறவுகள் மற்றும் வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை என்பவை பற்றி முக்கியமாக ஆராயப்படவுள்ளன. இப்பேச்சுவார்த்தைகளையடுத்து இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றும கைச்சாத்திடப்படவுள்ளது.

சீன அரசாங்கம் இலங்கைக்கு உதவியாக சுமார் 500 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.இந்தத தொகையில் 50 மில்லியன் ரூபா வரட்சி நிவாரண நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பாராளுமன்ற சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார ஆகியோரையும் தமது விஜயத்தின் போது இவர் சந்திக்கவுள்ளார். (ற-121)

# பிக்குவின் அடாவடித்தனத்துக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம் கண்டனம்

இருதயபுரம் கிராம சேவையாளர் எஸ்.விஜயரெத்தினம் பௌத்த பிக்கு ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவத்தை வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வாறு மிலேச்சத்தனமான முறையில் நடந்து கொண்ட பிக்கு மீது பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக சங்கம விடுத்துள்ள அறிக்கையில், மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் இருதயபுரம் கிராம சேவையாளர் எஸ்.விஜயரெத்தினம் தமது பிரிவு மக்களுடன் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது அவர்கள் துப்பரவு செய்த நிலம் பிக்குவிற்குச் சொந்தமானது என மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்பின் பொலிஸ் நிலையத்திற்குள் இடம்பெற்ற விசாரணையின் போது பிக்கு குறிப்பிடும் நிலம் பிக்குவிற்கு உரியது அல்ல என்றும் ஆவணங்கள் கிராம சேவையாளர் காண்பித்த வேளையில் அதனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு ஆத்திரப்பட்ட பிக்கு குடையினால் கிராம சேவையாளரைத் தாக்கியுள்ளார். இது குறித்து வடக்கு -கிழக்கு மாகாண கிராம சேவையாளர் சங்கம் தமது ஆட்சேபத்தினையும் கண்டனத்தினையும் தெரிவிக்கின்றது. இது குறித்து விரைவில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# ஒருவர் மனதை ஒருவர் அறிய உறவுப் பாலமாகும் அஞ்சற் சேவை

உலகில் உள்ள எல்லா நாட்டு மக்களும் சகல பேதங்களையும் மறந்து நினைவுகூருகின்ற சர்வ

**தகவல் தொழில் நுட்பம் அதீத வளர்ச்சி அடைந்து, தொடர்பாடல் சேவைகள் பல தற் கால கணனி யுகத்தில் நடைமுறையிலுள்ள போதும் ஆரம்பத் தொடர்பாடல் முறையான அஞ்சல் சேவை முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இன்றும் காணப்படுகிறது. சர்வதேச அஞ்சல் தினத்தைச் சிறப்பிக்கும் நோக்கில் இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

தேச அஞ்சல் தினம் இன்றாகும். சர்வதேச அஞ்சல் ஒன்றியத்தின் 130ஆவது அகவை நிறைவும் இன்றைய தினத்தில், ஒன்றியத்தினை நினைவுகூரும் பொருட்டு பிரகடனப்படுத்தப்பட்ட 35ஆவது உலக அஞ்சல் தினத்தை ஒட்டிய கொண்டாட்டங்களும் நடைபெறுகின்றன.

தகவல் தொழில்நுட்பத்தின் அதீத முன்னேற்றம் காரணமாக பல்வேறு வகையான தொடர்பாடல் வசதிகள் கிடைத்துள்ளபோதும், பின்வரும் முக்கிய காரணிகளின் மூலம் அஞ்சலின் முக்கியத்துவத்தினை உணரமுடியும்.

அ) அதி உச்ச இரகசியம் பேணப்படுதல்.

ஆ) குறைந்த கட்டணத்தில் அஞ்சற் சேவையினைப் பெற்றுக் கொள்ளுதல்.

இ) அஞ்சற் சேவையானது உலகின் மூலை முடுக்கு எல்லாம் வியாபித்துள்ளமை.

ஈ) அனுப்புபவருக்கும், பெறுநருக்கும் இடையில் ஒரு அபூர்வமான மன உணர்வினை **(senti mental)** ஏற்படுத்துதல், உதாரணமாக ஒருவர் தனது அன்புக்கு உரியவர்களிடமிருந்து கடிதங்களைப் பெறும்போதும் அதனைப் படிக்கும் போதும் அவர்களின் மனதில் அளவிலா ஆனந்தத்தினை ஏற்படுத்தும். இது எல்லா வகையான உணர்வுகளுக்கும் பொருந்தும். ஏனைய தொடர்பு முறைகளில் இந்த வாய்ப்புக்கள் குறைவாகும்.

### சர்வதேச அஞ்சல் ஒன்றியம்

ஆஸ்திரியா, கங்கேரி, பெல்ஜியம், டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி, பெரிய பிரித்தானியா, கிறீஸ், இத்தாலி, லக்ஸ்சம்போர்க், நெதர்லாந்து, நோர்வே, போர்த்துக்கல், ரோமேனியா, ரஷ்யா, சோபியா, ஸ்பெயின், சுவீடன், சுவிற்சர்லாந்து, துருக்கி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய 22 நாடுகள் இணைந்து 1874 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பயனாக "பொது அஞ்சல் ஒன்றியம்" என்ற பெயருடன் உருவாக்கம் பெற்று 1878 ஆம் ஆண்டு "பரிஸ்" நகரத்தில் நடைபெற்ற மாநாட்டில் "சர்வதேச அஞ்சல் ஒன்றியம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### அஞ்சல் வலயம்

ஒன்றியம் அமைக்கப்பட்டதற்கான நோக்கத்திற்கு இணங்க, உறுப்பு நாடுகள் அனைத்தும் அஞ்சற் பொருட்களை பரஸ்பர நம்பிக்கையுடன் கையாளுவதன் பொருட்டு சர்வதேசங்களும் ஒரு அஞ்சல் வலயமாகக் கருதப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத் தத்துவமானது உலகளாவிய ரீதியில் சுதந்திரமான அஞ்சற் போக்குவரத்துக்கு வழிசமைப்பதுடன், ஒரு அஞ்சல் நிர்வாகத்தினால் இன்னொரு அஞ்சல் நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் அஞ்சற் பொருட்கள் இடைநிலை அஞ்சல் நிர்வாகத்தினால் பொறுப்புடன் கையாளப்படுகின்றமையினை உறுதிப்படுத்துகின்றது.

சேவையினை இயக்குவதற்குத் தேவையான மற்றைய அடிப்படைத் தத்துவமானது அஞ்சற் பொருட்களின் நியமநிறை விகிதத்திற்கேற்ப அஞ்சல் கட்டணத்தினை நிர்ணயம் செய்தல், 1875 தொடக்கம் 1971 வரையான காலப்பகுதியில் அஞ்சற் பொருட்களை அனுப்பும் மூல நிர்வாகங்களே பெறப்படும் கட்டணங்களை தமக்குரியதாக்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், விநியோகத்தினை மேற்கொள்ளும் அஞ்சல் நிர்வாகத்திற்கு வேதனம் எதுவும் கிடைப்பதில்லை. ஆயினும் 1969 இல் டோக்கியோ நகரத்தில் இடம்பெற்ற மாநாட்டுத் தீர்மானம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அதாவது, குறிப்பிட்ட ஒரு அஞ்சல் நிர்வாகம் (நாடு) இன்னொரு அஞ்சல் நிர்வாகத்திற்கு (வேறொரு நாட்டிற்கு) அனுப்பும் அஞ்சற் பொருட்களின் நிறைக்கும் அந் நாட்டில் இருந்து முதற் குறிப்பிட்ட நாட்டிற்கு அனுப்பப்படும் அஞ்சற்பொருட்களின் நிறைக்கும் உள்ள வித்தியாசம் கணக்கிடப்பட்டு கூடுதலான அஞ்சற் பொருட்களை அனுப்பிய நாடு மற்றைய நாட்டிற்கு ஒன்றியத்தினால் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கிணங்க நட்டஈட்டுத் தொகையினை வழங்குதல் வேண்டும்.

இருபத்திரண்டு நாடுகளின் உறுப்புரிமையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியமானது இன்று 189 நாடுகளின் உறுப்புரிமையைக் கொண்டுள்ளது. இலங்கை குடியேற்ற ஆட்சி முறையின் கீழ் 01.04.1877 இலும் பின்னர் 13.07.1949 இல் குடியரசு நாடாகவும் ஒன்றியத்தில் இணைந்துள்ளது.

முதன் முதலாக அஞ்சல் அலுவலகம், அஞ்சலட்டை, முத்திரை புராதன காலத்தில் அரசர்களிடையே தூதுவர் மூலம் செய்திப் பரிமாற்றங்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டபோதும் 1815 வரை அஞ்சல் சேவை நடைபெற்றதற்கான பதிவுக் குறிப்புக்கள் கிடைக்கக்கூடியதாக இல்லை. 1815 இல் முதன் முதலாக ஆறு அஞ்சல் அலுவலகங்கள் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. 1872.08.22 இல் முதன் முதலில் அஞ்சலட்டை அறிமுகமானது. 1893.02.01 இல் முதலாவது அஞ்சல் முத்திரை இலங்கை நாணயத்தில் வெளியிடப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் அஞ்சல் முத்திரையினை உலகிற்கு அறிமுகம் செய்த சேர் றோலண்ட் ஹில்லை **(Sir Rowland Hill)** நினைவுகூர்வது சாலப் பொருத்தமானது. 1795இல் இங்கிலாந்தில் பிறந்த இவர் 1833 வரை ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரது

***அம்பலவாணர் துரைசிங்கம்***

அயரா முயற்சியினால் உலகின் முதலாவது அஞ்சல் முத்திரை 06.05.1840 இல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. 'பென்னிபிளாக்' என அழைக்கப்பட்ட இம் முத்திரை விக்டோரியா மகாராணியின் உருவப்படத்தினையும் **Postage, Onepenny** என்ற பதங்களையும மட்டுமே கொண்டிருந்தது. அது உலகின் முதல் முத்திரை என்ற காரணத்தினால் வெளியிடும் நாட்டின் பெயர் குறிப்பிடப்பட வில்லை. அஞ்சல் முத்திரையினை அறிமுகம் செய்தமைக்காக இவருக்கு 1860இல் சேர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் இன்றும் இவரது பெயர் உலகம் பூராகவும் நினைவுகூரப்படுகின்றது. □

## தம்பிலுவில்லில் மகளிர் சங்கம நிகழ்வு உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(தம்பிலுவில்)

2 ஆம் லெப். மாலதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் தமிழீழப் பெண்கள எழுச்சி நாளை முன்னிட்டு அம்பாறை மாவட்ட மகளிர் அமைப்புப் பிரதிநிதிகளுக்கான மகளிர் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் தம்பிலுவில் மகளிர் அமைப்புச் செயலாளர் உசேந்தினி தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை அம்பாறை மாவடட மகளிர் அரசியலதுறைப் பொறுப்பாளர் தாரகா ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை மட்டு. அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி ஏற்றி வைத்தார்.

2ஆம் லெப்.மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை தம்பிலுவில் மகாவித்தியாலய அதிபர் ஜயந்தன் ஏற்றினார். திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை தம்பிலுவில் கிராம உத்தியோகத்தர் கண்ணன் அணிவித்தார்.

மட்டு.அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், யோகா, கனகசபை வித்தியாலய அதிபர் ஜயந்தன் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் கலந்துகொண்ட மகளிர் அமைப்புப் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இறுதியில், மாலதியை நினைவு கூர்ந்தும், தேசியத் தலைவரை வாழ்த்தியும் கலந்துகொண்ட பிரதிநிதிகளால் பாடல் இசைக்கப்பட்டு முனையூர் மகளிர் அமைப்புச் செயலாளர் சந்திரிகாவின் நன்றியுரையுடன நிகழ்வு நிறைவுற்றது.

இதில் பல நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர்.(ற)

## தே. ஆ. சபையில் அங்கம்வகிப்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸினுள் இழுபறி

(கொழும்பு)

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனை சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அங்கம் வகிப்பது குறித்து அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய ஆலோசனைசபைக் கூட்டத்தில் கட்சி பங்குபற்றுவது அவசியமானதெனத் தமது தலைமைப் பீடத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன், கட்சியின் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள், இது விடயம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பின்னர் இது குறித்து ஓர் தீர்க்கமான முடிவுக்கு வருமாறு கட்சியின் தலைமைப்பீடத்தை வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ற)

## மட்டு. பொலிஸாரின் கூட்டத்தை கிராம உத்தியோகத்தர்கள் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சிறுவர் சம்பந்தமான கூட்டத்தினை மட்டக்களப்பு கிராம உத்தியோகத்தர்கள் பகிஷ்கரித்துள்ளனர்.

புததபிக்கு ஒருவர் கிராமஉத்தியோகத்தர் மீது ஆத்திரத்தில் குடையால் அடித்த சம்பவத்துக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையிலேயே இவர்கள் இக்கூட்டத்தை பகிஷ்கரித்தனர்.

நேறறு முன்தினம் காலை10.00 மணிக்கு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் சிறுவர் சம்பந்தமான ஒரு கூட்டத்திற்கு மண் முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் அனைவரையும் மட்டககளப்பு பொலிஸார் அழைத்திருந்தனர்.

ஆனால், பிக்குவின் தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வரை இப்படியான கூட்டங்களில் கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வதில்லையென மட்டக்களப்பு நகர கிராம உத்தியோகத்தர்கள் அனைவரும் கையப்பமிட்டு நேற்று முன்தினம் மண்முனை வடக்கு மட்டக்களப்பு பிரதேச செயலாளர் ஊடாக மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். (ற)

## மவுசாகல தோட்டத்தொழிலாளர்கள் வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம்

(மஸ்கெலியா)

மஸ்கெலியா மவுசாகல தோட்டத் தொழிலாளர்கள் சுமார் ஆயிரத்து 500 பேர் கடந்த இருநாட்களாகத் தொட து வேலை பகிஷ்கரிப்பல் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த வாரம் போயா தினத்தன்று மவுசாகல தோட்டத்தின் சமன் தேவாலயத்தில் வழங்கப்பட்ட அன்னதானத்தை உண்டவர்களில் ஏராளமானோர் வயிற்றோட்டம் மற்றும் வாந்தி பாதிப்புக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை இதனால் இருவர் உயிரிழந்தும் உள்ளனர்.

இதனையடுத்தே, மவுசாகல தோட்டத்தொழிலாளர்கள் சுமார் ஆயிரதது 500 பேர் வரையில் வேலை பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர்.

மேற்படி அன்னதானத்தில் நஞ்சு கலக்கப்பட்டிருக்கலாம் என ஐயம் வெளியிடப்பட்டுள்ள இவ் விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ற)

## நகரைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு இம்முறை சாவகச்சேரி தெரிவு

(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உபபிராந்திய யாழ்.மாவட்ட அலுவலகம் இந்த வருடத்திற்கான நகரைத் தூய்மைப்படுத்தும் செயற்திட்டத்திற்கு சாவகச்சேரி நகரத்தைத் தெரிவுசெய்துள்ளது.

இதறகான அங்கீகாரத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமைப்பீடத்தில் இருந்து இவ் அலுவலகம் பெற்றுக்கொண்டுள்ளது.

இச் செயற்திட்டத்தை நகராட்சி மன்றத்துடன் இணைந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபை உபபிராந்திய அலுவலகம் மேற்கொள்ளவுள்ளது.

இந் நகரைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு சாவகச்சேரி வியாபாரிகளிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது.

இச் செயற்றிட்டத்தின் மூலம் சாவகச்சேரி நகரத்தை அழகுபடுத் தல், ஆங்காங்கே அறிவித்தல் பலகைகள் இடல், திண்மக் கழிவுகளை உரிய முறையில் அகற்றுதல், மரம நடுதல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டல் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன. (ற-19)

# எகிப்தின் தாபா நகரில் குண்டுவெடிப்பு
# 50பேர் உயிரிழப்பு ; 120 பேர் படுகாயம்

எகிப்தின் தாபா நகரில் உள்ள உல்லாச விடுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப்பொன்றில் 50பேர் பலியானதுடன், 120பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தாபா நகரில் உள்ள பிரபல உல்லாச விடுதியான மேஹாட் என்ற ஐந்துநட்சத்திர விடுதியில் இரவுவேளை விருந்துபசார நிகழ்வு ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்த போதே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

பெரும் சத்தத்துடன் இக்குண்டு வெடித்துச் சிதறியதில் இவ் விடுதியின் ஒருபகுதி சேதமடைந்ததுடன் விடுதியின் வாயில் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன.

சம்பவத்தை தொடர்ந்து விடுதியில் கூடியிருந்தோர் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். இதனையடுத்து அங்கு விரைந்த பாதுகாப்புப் படையினர் காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் வண்டிகள் மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

இக்குண்டு வெடிப்பு சம்பவத்தால் தீப்பற்றி எரிந்த வாகனங்களைத் தீயணைக்கும் படையினர் உடைத்து அதனுள் அகப்பட்டுக கொண்டவர்களை மீட்டனர்.



இச்சம்பவத்தால் ஏற்பட்ட பதற்றத்தை தடுக்க அப்பகுதிக்கு ஏராளமான பாதுகாப்புப் படையினர் வருவிக்கப்பட்டு காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதில் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 40ற்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவித்தன.

எனினும் இக்குண்டு வெடிப்புக்கு என்ன காரணம். யாரால் இக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டது என எதுவித தகவல்களும் வெளியாகவில்லை. ஆனால் மேற்படி விடுதியில் நடைபெற்ற விருந்தில் கலந்து கொள்ள இருந்த அரசியல் பிரமுகர் ஒருவரை இலக்குவைத்தே இக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது. (ப)

# பாகிஸ்தானின் முல்தானில் குண்டுவெடிப்பு
# 49 பேர் பலி ; 100 பேர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முல்தான் நகரில் தடை செய்யப்பட்ட இயக்கத்தினரின் பேரணியின் போது கார்க்குண்டு வெடித்ததில் 49போ கொல்லப்பட்டனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனையடுத்து வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க முல்தான் நகரில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

அரசால் தடைசெய்யப்பட்ட சின்னி முஸ்லிம் அமைப்பான ஷிபா-இ-ஷேபா அமைப்பின் பேரணி மற்றும் கூட்டம் முல்தான் நகரில் நடைபெற்றது. அமைப்பின் நிறுவனர் ஆசாம் தாரிக் கடந்த ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பேரணியும், கூட்டமும் நடந்தது.

கூட்டம் முடிந்த பிறகு அதில் பங்கேற்றோர் தமது இருப்பிடங்களுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தபோது, நிறுத்தப்பட்டிருந்த கார்க்குண்டு வெடித்தது. இதில் 49பேர் கொல்லப்பட்டனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் 50 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாகக் கார்க்குண்டைத் தவிர மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த குண்டும் வெடித்ததாகக் கூறப்பட்டது. ஆனால் அதை முல்தான் நகர மேயர் பிர் ரியாஸ் குரேஷி மறுத்தார். குறிப்பட்ட நேரத்தில் வெடிக் கக்கூடிய வெடிகுண்டு காரில் வைக்கபபடடி ருந்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பிறகு சின்னி முஸ்லிம்கள் மருத்துவமனை வளாகத்தல் குழுமியிருந்து எதிர்ப் பிரிவினருக் கும் அரசுக்கும் எதிராக கோஷமிட்டனர்.

அதைத் தொடர்ந்து அசம்பாவிதச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அப்டாப் ஷெர்பாவ் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் மேற்கே உள்ள ஷியால்கோட் நகரில் உள்ள ஷியா முஸ்லிமகளின் மசூதி அருகே மனித வெடிகுண்டு வெடித்ததில் 31பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷபா-இ-ஷேபா அமைப்பையும், லஷ்கர்-இ-ஜாங்வி அமைப்பையும் கடந்த 2002இல் தடை செய்வதாக அதிபர் முஷாரப் அறி வித்தார்.

அதைத் தொடர்ந்து இந்த அமைப்பு மிலாத்-இ-இஸ்லாமியா என்று பெயரை மாற்றிக் கொண்டு தற்போது ஆளும் பாகிஸ் தான் முஸ்லிம் லீக்குக்கு இது ஆதரவு தெரிவித்துள்ளது. (ப)

# பிணநாற்றம் வீசும் அதிசய மலர்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள தாவரவியல் பூங்காவில் படைட்டன் அரும் என்னும் அதிசய வகை மலர் பூத்திருக்கிறது. பிண நாற்றமடிக்கும் இப் பூ உலகி லேயே அதிக நாற்றம் தரும் பூ வரிசையில் முதல் இடம் பிடித்திருக்கிறது.

இந்தோனேசியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு அவுஸ்திரேலியாவில் வளர்க்கப்படும் இந்தத் தாவரத்தைக் காண மக்கள் காத்துக் கிடக்கின்றனர்.

சுமார் 1.33 கி.மீட்டருக்கு நாற்றத்தைப் பரப்பி பூச்சிகளைக் கவர்ந்து இழுக்கும் இந்தப் பூவின் தாவரவியல் பெயர் "அமர் போபாலஸ் டைட்டானியம்" 40வருட வாழ்நாளில் இரண்டு அல்லது மூன்று முறை பூ பூக்கிறது.

பூககின்ற பூவும் இரண்டு அல்லது மூன்று நாள்கள் மட்டுமே வாடாமல் இருக்கும்.(ப)





# அமெரிக்க புலனாய்வுத்துறையின் அறிக்கைமூலம் சதாமின் ஆட்சிமோசடிகள் அம்பலமாகின
## ஐ.நா. அதிகாரிகள், அரசியல்வாதிகள் என பலரும் சிக்கினர்

ஈராக்கை ஆட்சி செய்தபோது கோடிக் கணக்கான பணத்தை சதாம் ஹுசேன் சுருட்டியுள்ளார். இவைகளை டொலர்களாகவும் தங்கக் கட்டிகளாகவும் மாற்றிச் சேமித்தார். இதல் பல நாடுகளைச் சேர்ந்த பெரிய அரசியல் கட்சிகள், நிறுவனங்கள், அரச உயரதிகாரிகள் சதாமிடம் இருந்து லஞ்சம் பெற்றுள்ளனர் என்று அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள் ளது.

கடந்த 1990ல் ஈராக் மீது ஐ.நாடுகள் சபை பொருளாதாரத் தடை விதித்தது. எனினும், மனிதாபிமான முறையில் உணவுக்கு எண்ணெய் திட்டத்தை ஐ.நா.கொண்டு வந்தது. அதன் மூலம் ஈராக்கில் உள்ள கச்சா எண்ணையை ஏற்றுமதி செய்து அதற்கான அத்தியாவசியப் பொருட்களை நிபந்தனையுடன் இறக்குமதி செய்ய அனுமதிக்கப் பட்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த ஐ.நா ஆய்வுக்குழுத்தலைவர் பெனான் சீவான் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப் பட்டது.பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில், பல நாடுகளைச் சேர்ந்த கமபனிகள், அரச அதிகாரிகள், அரசியல் கட்சிகளுக்கு ஓயில் பவுசர்கள மூலம் சதாம ஹுசேன லஞ்சம் கொடுததுள்ளார்.



ஏராளமான எணணெய் வளம் உள்ளநாட்டில் பொருளாதார நிலை மோசமாகவே இருந்தது. மக்களுமமுன்னேற்றம் அடைய வில்லை. அடிப்படை வசதிகளும் இல்லை காரணம் சதாம் ஒரு சர்வாதிகாரி யாகச் செயலபட்டுத்தன் வளத் தைப் பெருக்கினார். எதிர்த்தவர்களை அழித்தார்.

அமெரிக்கக் கட்டுப்பாட்டுக்குள் ஈராக் வந்தபின, "உணவுக்கு எண்ணெய் திட்டம்" குறித்து அமெரிக்க அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்தினர். விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப் பட்டது. அதில், சதாம் ஹுசேனின் திரைமறைவு வேலைகள், அவருக்கு உதவிய நாடுகள், அதிகாரிகள், அரசியல் கட்சிகளின் பெயர்கள் அடங்கிய லஞ்சப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் ஐ.நாசபையால் பொருளாதாரத் தடைவிதிக்கப்பட்ட போது,தடையை மீறிசிரியா, ஜோர்தான், லெபனான், துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட், ஏமன் ஆகிய நாடுகளிடம் இருந்து பொருட்களை இரகசியமாகச் சதாம் பெற்றுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. ஐ.நா. பாதுகாப்புக் கவுன் சிலில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் பிரான்ஸ், ரஷ்யா,சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசியல் கட்சிகள் ,கம்பனிகள் என்று 40 க்கும் மேற்பட்டோர் சதாமிடம் திரைமறைவு ஒப்பந்தம் செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது. இந்த மோசடியில் ஐ.நாடுகள் அதிகாரியான பெனான் சீவான் மீதும் ஏற்கனவே பல புகார்கள் எழுந்தன. அப்போதெல்லாம் அதை அவர் மறுத்துவந்தார். எனினும், அவருடைய பெயரும் சி.ஐ.ஏ பட்டியலில் தற்போது இடம்பெற்றுள்ளது. சி.ஐ.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை யின் பிராகரம் ஐ.நா. அதிகாரி சீவானின் பெயர் "மிஸ்டர் சிபான்" என்று மாற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.மொத்தம் 1200 பக்கங் கள் அடங்கிய சி.ஐ.ஏ. அறிக்கையில், இந்தோ னேசிய அதிபர் மேகவதி சுகாணபத்ரி பிரான்ஸ் உள்துறை முன்னாள் அமைச்சர் சார்லஸ் பஸ்குவா ரஷ்யாவில் உள்ள ஜனா நாயக விடுதலை கட்சியைச் சேர்ந்த விளாடி மிர் ஜரினோவ்ஸ்கி. ரஷ்ய அதிபர் அலுவலகம் மற்றும் வெளியுறவு அலுவலகம், உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி, உகரைன் சோஷலிசக் கட்சி, லெபனான் அதிபர் எமலி லகோத் மகன் உப்பட்ட பலர் சதாமுக்கு உதவிபுரிந்துள்ளனர் என்று பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# புதிய வகை மனிதக் குரங்குகள்


(பரிஸ்)

விஞ்ஞானிகள் எவருக்கும் இதுவரை தெரிந்திராத புதிய வகை மனிதக் குரங்குகள் மத்திய ஆபிரிக்க நாடுகளில் வசிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவின் காங்கோ ஜனநாயகக் குடியரசின் வடக்குப் பகுதியில் போன்டோ, பிலி ஆகிய நகரங்களைச் சுற்றி அடர்ந்த காடுகள் உள்ளன. இக்காடுகளில் இதுவரை அறியப்படாத குரங்கு இனங்கள் வசித்து வருவது ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீடியோ காட்சிப் பதிவுகள், அப்பகுதியில கிடைத்த எலும்புகள், நேரில் பார்த்தவர்களின் கருத்துகள் ஆகியவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது அக்குரங்குகளின் முகம் கறுப்பாகவும் பெரியதாகவும் இருப்பதாகத் தெரியவந்தது.

2மிட்டர் உயரமுள்ள இக்குரங்குகள் 85முதல் 102கிலோ வரை எடை உள்ளவை. இவை மனிதர்களைப்போல நடக்கவும், ஓடவும் தெரிந்தவை. கூட்டம் கூட்டமாக வாழும் இக்குரங்குகள் தன் ஜோடியை பிரியாமல் வாழும் குணமுடையவை எனவும் அறியப்பட்டுள்ளது. (ப)



சோ:.பியாவில் இருந்து 200கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஷிப்கா எனும் கிராமத்தில், ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில், இரண்டு தங்க நாணயங்கள் கிடைத்துள்ளன. மிகவும் வேலைப்பாடுடன் கூடிய இந்த நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டள்ளது. இத்தங்க நாணயத்தினை படத்தில் காணலாம்

# 400 விக்கெற்றுக்களைப் பெற்ற இரண்டாவது இந்திய வீரராக கும்ளே

அவுஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையே பெங்களூரில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்



தின்போது இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில்கும்ளே தனது டெஸ்ட் வாழ்க்கையில் 400ஆவது விக்கெற்றைப் பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய வீரர் ஹடிச்சை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் தனது 400ஆவது விக்கெற்றைப் பெற்றார் கும்ளே. இதுவரை 85 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கும்ளே, சர்வதேச அளவில் 400ஆவது விக்கெற்றைப் பெற்ற 9ஆவது வீரராகவும், இந்தியாவில் 2ஆவது வீரராகவும் திகழ்கிறார். இவரைவிட இந்தியாவின் முன்னாள் கிரிக்கெற் அணித்தலைவரும், மிகச்சிறந்த சகல துறை ஆட்டக்காரருமான கபில்தேவ் மட்டுமே இந்தியா சார்பில் 434 விக்கெற்றுக்களைப் பெற்றுள்ளார்.

கபில்தேவ் சாதனையை முறியடிப்பதே தனது நோக்கம் என கூறியிருக்கும் கும்ளே 400ஆவது விக்கெறறைப் பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாகவும், தனது பந்துவீச்சில் தான் திருப்தி அடைவதாகவும் கூறியிருக்கிறார்.

400 விக்கெறறுக்களைப் பெற்ற வீரர்களின் பட்டியல் வருமாறு:-

முரளிதரன் (இலங்கை) 532, ஷேன்வோன் (அவுஸ்திரேலியா) 527, ஹொட்னி வோஷ் (மே.இ.தீவுகள்) 519, கிளென்மெக்ராத் (அவுஸ்திரேலியா) 440, கபில்தேவ் (இந்தியா) 431, வசீம் அக்ரம் (பாகிஸ்தான்) 414, அம்ரோஸ் (மே.இ.தீவுகள்) 405. அனில் கும்ளேயும் தற்போது இபபட்டியலில் இணைந்துள்ளார்.

இதேவேளை, 400விக்கெற்றுக்களைப் பெற்ற 2ஆவது இந்திய வீரரான அனில் கும்ளேக்கு அவரது சொந்த மாநிலமான கர்நாடகாவின் கிரிகெற் சங்கத்தினர் அவருக்கு வித்தியாசமான முறையில் கௌரவிப்புச் செய்துள்ளனர்.

அன்றைய போட்டியின் தேநர் இடைவேளையின் போது, கர்நாடக கிரிக்கெற் சங்கப் பிரமுகாகள் மைதானத்தில் அணிவகுக்க உள்ளே வந்த அனில் கும்ளேக்கு சிறப்புப பரிசும் 400ஆவது விக்கெற்றை வீழ்த்திய பந்தும் பரிசளிக்கப்பட்டது.

இப்பரிசுகளை வழங்கியவர் அனில் கும்ளேயின் தாயாரான



சரோஜா கும்ளே. தனது அன்பு மகனுக்கு பரிசுக் கிண்ணத்தை வழங்கிய திருமதி சரோஜா, அதை விட பெறுமதியான பரிசொன்றையும் அவருக்கு வழங்கினார்.

உயரமான அனில் கும்ளேயை இழுத்தணைத்து, இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமாரி சொரிந்தா அந்த அன்பு அன்னை. அருகில் இருந்த கும்ளேயின் மனைவி அதை ரசிக்க... முழு அரங்கமும் கரவொலிகளால் தமது வாழ்த்தைத் தெரிவிக்க... நெஞ்சம் நெகிழ்ந்து போனார் கும்ளே. அனிலின் கிரிக்கெற் வாழ்க்கையில் உன்னதமான தருணம் அதுவன்றோ! (ப-7)

# இந்தியா–அவுஸ்திரேலியா முதலாவது டெஸ்ட் போட்டி

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதற்போடடி கடந்த 6ஆம் திகதி பெங்களூர் சின்னச்சாமி மைதானததில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெறற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட விரும்பி களமிறங்கியது. தனது முதல் இன்னிங்ஸில் முதல்நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலிய அணி 90ஓவர்களில் 5விக்கெற்றுக்களை இழந்து 316ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஹேடன்-26, லாங்கர்-52, மாட்டின்-3, டரன் லீமன்-17, ஹேடிச்-81 ஓட்டங்களையும் பெற்றனர்.ஆட்ட நேர முடிவில் கில்கிறிஸ்ற் 35 ஓட்டங்களுடனும் கிளாக் 76 ஓட்டங்களுடனும ஆட்டமிழக்காது இருந்தனர்.பந்து வீச்சில் கும்ளே-3, இர்பான்பதன், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

7ஆம் திகதி 2ஆம் நாள் ஆட்டம் தொடாந்தபோது ஹில் கிறிஸ்ற் மைக்கல கிளார்க் ஆகியோர் செஞ்சுரி அடித்தனர். இதில் மைக்கல் கிளாக் தான் விளையாடும் முதல் டெஸ்டிலேயே செஞ்சுரி அடித்தது குறிப்பிடத்தக்கது.

ஹில்கிறிஸ்ற்-104, மைக்கல் கிளார்க்-151ஓட்டங்களைப் பெற்றனர். 130ஓவர்களில் ஆஸி.அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 472 ஓட்டங்களைப பெற்றது. பந்து வீச்சில் ஹர்பஜன்சிங் 5விக்கெற்றுக்களைட் பெற்றமை முக்கியமானது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்சை ஆடகளமிறங்கிய இந்திய அணிக்கு சச்சின் இல்லாத குறை ஆரம்பத்திலேயே தெரிந்தது. இந்திய அணி ஓட்டமெதுவும் பெறாத நிலையில் முதல் விக்கெற்றாக ஷோப்ராவையும், 4 ஓட்டம் பெற்ற போது ராவிட்டையும் இழந்தது.

இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 44ஓவர்களில் 6 விக்கெற்றுக்களை இழந்து 150 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. பந்துவீச்சில் கிளென் மக்ராத் 3விககெற்றுக்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து 3ஆம் நாள் ஆட்டம் நேறறு ஆரம்பமானபோது மேலும் 124ஓட்டங்கள் (Follow-On) பொலோ - ஒன்னைத் தவிர்க்கத் தேவையான நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்த இந்திய அணி 246ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. இந்தியா பொலோ-ஒன் ஆனபோதும் அவுஸ்திரேலியா தனது 2ஆவது இன்னிங்சை ஆட முடிவு செய்தது.

தேநீர் இடைவேளையின் போது அவுஸ்திரேலியா தனது 2ஆவது இன்னிங்ஸில் 18 ஓவர்களில் 2விக்கெற்றுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. லாங்கர் ஓட்டமெதுவும் பெறாமலும் ஹேடன் 30ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். (ப-7)

# காலபந்து தரவரிசைப் பட்டியல்; பிரேஸில், பிரான்ஸ் முன்னணியில்

சர்வதேச காலபந்தாட்டத் தரவரிசையில் பிரேஸில் அணி முதலிடத்தையும் பிரான்ஸ் அணி இரண்டாவது இடத்தையும் தொடர்ந்தும் வகித்து வருகின்றன.

சர்வதேச காலபந்துக் கூட்டமைப்பு, அண்மையில் வெளியிட்ட புதிய தரவரிசைப் பட்டியலில் தொடாந்து 845 புள்ளிகளுடன் பிரேஸில் முதல் இடத்திலும், பிரான்ஸ் 799புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் இருக்கின்றன.

இதுவரை நான்காவது இடத்திலிருந்த ஆர்ஜென்ரீனா மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ள அதேவேளை, மூன்றாவது இடத்திலிருந்த ஸ்பெயின் நான்காம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

இததரவரிசைப் பட்டியலில் 335 புள்ளிகளைப்பெற்று இந்தியா 138 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

சாவதேச காலபந்து கூட்டமைப்பு அண்மையில் வெளியிட்ட தரவரிசைப் பட்டியல் விபரம் வருமாறு:-

| தரவரிசை | அணி | புள்ளி |
|---|---|---|
| 1 | பிரேசில் | 845 |
| 2 | பிரான்ஸ் | 799 |
| 3 | அர்ஜெண்டினா | 778 |
| 4 | ஸ்பெயின் | 774 |
| 5 | ஹாலந்து | 755 |
| 6 | செக் குடியரசு | 751 |
| 7 | இங்கிலாந்து | 739 |
| 8 | போர்ச்சுகல் | 735 |
| 8 | இத்தாலி | 735 |
| 10 | மெக்சிகோ | 734 |

# கூடைப்பந்தாட்ட அணி தேர்வுப் பயிற்சி

இம்மாத இறுதியில் கொழும்பில் நடைபெற இருக்கும் தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான யாழ். மாவட்ட அணிகள் இன்று தெரிவு செய்யப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், 22 வயதுக்குட்பட்ட மற்றும் சிரேஷ்ட ஆண், பெண் அணிகளைத் தெரிவுசெய்வதற்கான தெரிவுப் பயிற்சி ஒன்றை இனறு மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடாத்தவுள்ளது.

இவ் அணிகளில் இடம்பெற விரும்பும் வீர,வீராங்கனைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், கழகங்களின் வீரர்கள் அனைவரையும் இத் தெரிவுப் பயிற்சிக்கு சமூகமளிக்குமாறு சங்கத்தின் செயலாளர் எஸ். அகிலன் கேட்டுள்ளார். (ப-7)



இலண்டனில் உள்ள கிறே ஹவுண்ட் மைதானத்தில் இடம்பெற்ற நாய்களுக்கான ஓட்டப் போட்டியில் டேவ்லின் அல்மா, ஷி போ லொஷின் என்ற பெயர்களைக் கொண்ட நாய்கள் போட்டிபோட்டு ஓடுகின்றன.

## விளையாட்டு செய்திகள்

# நியூசிலாந்து அணிக்கு வெற்றோரி தலைவர்

ஒருநாள் தொடருக்கான நியூசிலாந்து அணியின் தலைவராக டேனியல் வெற்றோரி அறிவிக்கப்பட்டுள்ளார்.



நியூசிலாந்து கிரிக்கெற் அணி பங்களாதேஷ் சுற்றுப பயணத்தில் இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று போடடிகள கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்க உள்ளது. இதற்கான நியூசிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

டெஸ்ட் அணியின் தலைவராக ஸ்டீபன் பிளமிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஒருநாள் தொடரில் இவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டு, சுழற்பந்து வீச்சாளர் டேனியல வெற்றோரி தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். வெற்றோரி தலைமைப் பொறுப்பை ஏற்பது இதுவே முதல்முறையாகும். முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி டாக்காவிலும் அடுத்த போட்டி எதிர்வரும் 26ல் ஷிட்டகொங்கிலும் நடைபெறவுள்ளன. ஒருநாள் போட்டிகள் வரும் நவம்ர் 2 (ஷிட்டகொங்) நவம்பர் 5மற்றும் 7 (இரண்டும் டாக்காவில்) ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

அறிவிக்கபபட்டுள்ள இரு அணிகளின் விபரம் வருமாறு:-

டெஸ்ட்அணி: ஸ்டீபன் பிளமிங் தலைவர்) மார்க்ரிச்சட்சன் மத்யூ சின்கிளையர், ஸ்காடஸ் டைரிஸ், நாதன் ஆஷ்லே, ஹமிஸ் மார்ஷல், ஜேக்கப் ஓரம், மெக் கல்லம், டேனியல் வெற்றோரி,போல் வைஸ்மேன், ஜேம்ஸ் பிராங்ளின், மில்ஸ்,பட்லர், கிறிஸ்மாட்டின்

ஒருநாள்அணி: டேனியல்வெற்றோரி (தலைவர்) மத்யூசின் கிளையர், ஸ்காட் ஸ்டைரிஸ், நாதன் ஆஷ்லே,ஹமிஷ் மார்ஷல், பீற்றர் புல்டன், மக்மில்லன், மெக்கலலம், கிறிஸ்கெய்ன்ஸ், கிறிஸ் ஹரிஸ், ஆந்த்ரே அடம்ஸ், மில்ஸ் மற்றும் இயான் பட்லர்.(ப-7)

# பாக்டெல் முக்கோணத் தொடர் 8 விக்கெற்றுக்களால் பாக்.வெற்றி

பாகிஸ்தானில் நடைபெறும் 'பாக் டெல்' முக்கோணத்தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியில் பாகிஸ்தான் அணி 8 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது.

கராச்சியில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணியில் ஆரம்பமே சரியில்லை. அணியின் ஓட்ட எண்ணிக்கை 4ஆக இருந்தபோது ஒரு ஓட்டத்துடன் அபிஷேக் ஆட்டம் இழந்தார்.

அதன்பின் அத்தப்பத்துவும் ஜெயசூரியாவும் சிறப்பாக விளையாடிபோதும் ஜெயசூரியா 1 சிக்ஸர் 5பவுண்டரி உட்பட 53ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டமிழந்தார்.

அதன்பின் இலங்கையணியின் விக்கெற்றுக்கள் தொடர்ச்சியாக விழத்தொடங்கின. அத்தப்பத்து 46ஓட்டங்களுடனும், சங்ககார 38ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மஹிலவால் 18ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள தாராளமாக 33ஓட்டங்களை உதிரிகளாக வழங்கியிருந்தனர்.

50ஓவர்களில் இலங்கை அணி 9விக்கெற்றுக்களை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது.

பநதுவீச்சில் சொகைப் மாலிக் 3விக்கெற்றுக்களையும் முகமட் சாமி 2விக்கெற்றுக்களையும் நவிட் உல்-ஹசன், சொகைப் அக்தார், அவ்ரிடி ஆகியோர் தலா ஒருவிக்கெற்றையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் சற்றுக் கஸ்டப்பட்டாலும் பின்னா இலகுவாக வெற்றியீட்டியது. பாகிஸ்தான் அணி 33ஓட்டங்களைப் பெற்ற போது ஆரம்ப விக்கெற்றுக்கள் இரண்டையும் இழந்தது.

அதன்பின் களமிறஙகிய சொகைப் மாலிக் மறறும் யூசுப் யுகானா ஆகியோர் சிறப்பாக விளையாடி அணியை வெற்றிபெறச் செய்தனர்.

சொகைப் மாலிக் 1சிக்ஸர், 3 பவுணடரி உட்பட 86 ஓட்டங்களையும்,யூசுப் யுகானா ஒரு சிக்ஸர் 4 பவுண்டரி உட்பட 107ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர். யூசுப் யுகானா பெற்ற 10ஆவது செஞ்சுரி இதுவாகும்.

பாகிஸ்தான் 2விக்கெற்றுக்களை மாத்திரம் இழந்து 8விக்கெறறுக்களால் இலங்கை அணியை சுலபமாக வென்றது. இதுவரை நடைபெற்ற 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றதன் மூலம பாகிஸ்தான் அணி 16 புள்ளிகளைப பெற்று முன்னிலையில உள்ளது.

இலங்கை, சிம்பாப்வே அணிகளில், முன்னிலைபெறும் அணியுடன் பாகிஸ்தான் அணி இறுதிப் போட்டியில் விளையாடும். (ப-7)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் - குறள்

வலம்புரி

# ஹெல உறுமய உடைவு பேரினவாதம் வலுப்பெறுகிறது

ஹெல உறுமயவுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக தென்னிலங்கை [illegible]யலில் பரவலாக பேசப்படு கின்றது.

ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமங்கல தேரர் ராஜிநாமாச் செய்யவும், கட்சியின் தலைவர் எம்.பி. பதவியோடு ஐக்கிய தேசிக் கட்சிக்குத் தாவவும் முடிவு செய்திருப்பதால், அந்தக் கட்சி சிதைவுறும் என நம்பப்படுகிறது.

சிஹல உறுமய என்ற பேரில் இயங்கிய ஹெல உறுமய மதமாற்றத்திற்கு எதிராக குரல் கொடுத்து, அதனை தமது தேர்தல் பிரசாரமாக முன்வைத்ததன் காரணமாக அக் கட்சிக்கு ஒன்பது ஆசனங்கள் பாராளுமன்றத்தில் கிடைத்தன.

கௌதம புத்தபிரானின் போதனைகளை பரப்புவதற்காக துறவு பூண்ட பௌத்த துறவிகள் ஹெல உறுமயவில் இணைந்து தேர்தலில் குதித்தனர்.

பௌத்த மதத்தை - சிங்கள இனத்தை காப்பாற்றுவதற்காக பாராளுமன்றம் செல்வதற்கு உதவுங்கள் என பௌத்த துறவிகள் கெஞ்சிக் கேட்டதன் காரணமாக மக்கள் வாக்களித்தனர்.

நடந்து முடிந்த தேர்தலுக்கு முன்னைய தேர்தலில் சிஹல உறுமய என்ற பேரில் போட்டியிட்டு எந்த ஆசனத்தையும் பெற்றுக்கொள்ளாத கட்சி, ஹெல உறுமய என்ற பேரில் ஒன்பது ஆசனங்களை பெற்றுக்கொண்டமை ஓர் சாதனையே.

இந்த வெற்றியை அவர்கள் பெறுவதற்கு இனவாத சிங்களவர்கள், மதமாற்றத்தை எதிர்க்கும் பௌத்தர்கள், பௌத்த துறவிகளை மதிக்கும் மக்கள் என்ற மூன்று தரப்பினர் காரணமாகவிருந்தனர்.

அதிலும் பேரினவாதத்தை ஆதரிப்பவர்களும்- இலங்கை பௌத்த சிங்கள நாடு எனக் கர்ச்சிப் போரும் கணிசமான வாக்குகளை ஹெல உறுமயவிற்கு வழங்கினர்.

இவ்வாறு நாட்டைக் குட்டிச் சுவராக்கும் போக்குடையவர்களின் ஒரு திரட்சியாக உருவெடுத்த கட்சியே ஹெல உறுமயவாகும்.

இப்போது அந்தக் கட்சிக்குள் உடைவு ஏற்பட்டுள்ளது. ஒரு பிரமச்சாரி நூறு குரங்குக்கு சமன் என்ற பழமொழிக்கு அமைய பல பௌத்த துறவிகள் ஒன்று சேர்ந்தால் அது ஒரு குரங்குப் பட்டாளத்துக்கே நிகராகும் என்ற வகையில் கட்சிக்குள் உட்பூசல் ஏற்பட்டிருப்பது விசித்திரமான தொன்றல்ல.

ஆனால், அந்தக் கட்சி உடைவுறுவது கூட ஒரு வகையில் ஆபத்தானதே. அதாவது, இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் என்ற வாக்குக்கு அமைய ஹெல உறுமய உயிர்ப்புடன் இருந்தாலும் உடைவுற்றுப் போனாலும் நாட்டிற்கு ஆபத்தென்பதில் மாற்றமில்லை.

கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ன ஹெல உறுமயவில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளார். அவரின் இணைவை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதாகத் தெரியவில்லை. இனவாதம் பேசி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகம் விளைவித்த ஒரு கட்சியின் தலைவரை ஏற்றுக்கொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் எனக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சி, இனவாதம் பேசுகின்ற ஒரு கட்சியின் தலைவரை சேர்த்துக் கொள்வதற்கு தயாராக இருக்கிறதெனில், இதிலிருந்து தமிழ் மக்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி. யுடன் கூட்டுச் சேர, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஹெல உறுமயவை தனக்குள் உள்வாங்கிக் கொள்கிறது. எனவே ஹெல உறுமயவிற்குள் உடைவு என்ற செய்திக்கு அப்பால் பேரினவாதம் வலுப்பெறுகின்றது என்ற மறைந்து நிற்கும் உண்மையையும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

# போக்குவரத்துச் சபையின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிகூறுகிறார் அமைச்சர் லால்காந்த

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துசபையின் தொழிலாளாகளை அச்சுறுத்தும் ஸ்ரீலங்கா கட்சி சார்பு சேவய சங்கமயவின் அடாவடித்தனங்கள் நிறுத்தப்படாவிட்டால், அரசாங்கம் பாரதூரமான பின்விளைவுகளை சந்திக்க வேண்டியேற்படும்.

இதனால் அரசாங்கமே இல்[illegible] நி[illegible]யும் ஏற்பட வேண்டியிருக்கும் என்று ஜே.வி.பி.யின் [illegible]தாழிற்சங்கத் தலைவரும், அமைச்சருமான லால்காந்த எச்சரித்துள்ளார்.

லங்கம சுரகீமே சங்கத்தின் கூட்டத்திலேயே அமைசசர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது உழைப்பினாலும், வியர்வையினாலும் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது. ஆடம்பர வாழ்வு நடத்திக் கொண்டு இப்பொழுது அமைச்சர்களாக வீற்றிருப்பவர்கள் அல்ல. இந்தப் புரட்டர்களின் தாளத்திற்கு எம்மால் ஆடமுடியாது. இன்றைய சூழ்நிலை எமது பொறுமையைச் சோதிக்கிறது.

நாட்டை ஆளுபவர்களும் நாங்களே, தொழிற்சங்க நடவடிக்கைகளை நடத்துபவர்களும் நாங்களே. இலங்கைப் போக்குவரத்துச் சபையை மூடிவிட வேண்டும். பின்னர் புதிய முகாமைதத்துவத்தின் கீழ் மீள அது உருவாக்கப்பட வேண்டும். சபையை மூடிவிட்டு தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பி விட வேண்டும். பின்னர் அவர்களில் சிலரை தேர்ந்தெடுத்து வேலையில் அமர்த்துதல் வேண்டும் என்றே நான் கருது கிறேன்.

இவ்வாறு செய்தால் மட்டுமே போக்குவரத்துச் சபையை இலாபத்தில் இயங்கவைக்க முடியும் எனக் குறிப்பிடட அமைச்சர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கத் தலைவர் 'மேபியா' குமபலைப் போல செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார். (ந-6)

## தபால் நிலையச் செயற்பாடுகளில்

# அநீதி இழைக்கப்படுமானால் முறையீடு செய்யுமாறு அறிவிப்பு

நாட்டில் உள்ள அனைத்து தபால் நிலையங்களிலும் பொது மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுகின்றன.

இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்து வருகின்றார்கள்.

இவ்வாறு இழைக்கப்படும் அநீநிகளை பொலிஸாரிடம் முறையிடுமாறு தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகளைப் பொலிஸாருக்குத் தெரிவித்ததோடு மட்டுமல்லாது அதன் பிரதிகளை தபால் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவ்வாறு முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட்டால் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒருமாத காலத்திற்குள் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை நடாத்தி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும.

தபால் திணைக்களத்தில் கடமையாற்றும் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக தற்சமயம் முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

அவற்றில் 300 முறைப்பாடுகள் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, தபால் முத்திரைக் கட்டணம் அதிகரிக்கப்படலாம் என்றும் இதுதொடர்பல திறைசேரியால் இன்னமும் அறிவிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-121)

# அரசின் பொருளாதாரக் கொள்கை குறித்து சர்வதேச நிதிநிறுவனங்களுடன் பேச்சு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை தொடர்பாக உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளது.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரித்ததன் காரணமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து சர்வதேச நிதிநிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாக நிதியமைச்சா சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த நிதியமைச்சர், நேற்று முன்தினம் நாடு திரும்பிய போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

எரிபொருள் விலை அதிகரித்தமையினால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எமது அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக உலகவங்கி தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இதுவிடயம் குறித்து எதிர்காலத்தில் கலந்துரையாட எண்ணியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ந-121)

# சிஹல உறுமய தலைவர் ஐ.தே.கவுக்கு தாவுகிறார்

(கொழும்பு)

சிஹல உறுமயவின் முன்னாள் தலைவர் திலக் கருணாரட்ண மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரப் போவதாக அறிவித்துள்ளார்.

தீவிர சிங்களப் பேரினவாதியான திலக்கருணாரட்ண ஐக்கியதேசியக் கட்சியுடன் முரண்பட்ட நிலையிலேயே அக்கட்சியில் இருந்து வெளியேறி சிஹல உறுமய என்னும இலங்கைப் பேரினவாதக் கட்சியை ஆரம்பித்திருந்தனர்.

சிஹல உறுமயக் கட்சியுடன முரண்பட்டுள்ள நிலையில அக்கட்சியில் இருந்து வெளியேறி மீண்டும் ஐ.தே.கவுக்கு செல்லவுள்ள திலக்கருணாரட்ண இதற்கான காரணத்தை பிறிதொரு தினத்தில் அறிக்கை ஒன்றின் மூலம் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் அவரு[illegible]ன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிஹல உறுமய கட்சி பிளவுபட்டு கடந்த பொதுத் தேர்தலில ஜாதிக ஹெலஉறுமய என்ற பெயரில் போட்டியிட்டு 9 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வாக்களிப்பில் அடையாள அட்டை; வாக்குரிமையை இல்லாதொழிக்கும்

(கொழும்பு)

வாக்களிப்பின் போது தேசிய அடையாள அட்டை சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குவது வடக்கு-கிழக்கைச் சேர்ந்த பெருமளவான மக்களின் வாக்குரிமையை இல்லாதொழிககும் முயற்சியென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த பெருமளவான மக்களுக்கு அடையாள அட்டையில்லை. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாடடுப் பிரதேசம், அரச கட்டுப்பாடற்ற பிரதேசம் என இரண்டு பிரிவுகள் உள்ளன.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள திணைக்களங்களில் அடையாள அட்டை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படடுள்ள போதிலும் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுவதனால் அடையாள அட்டையை வழங்கும நடவடிக்கை தாமதமடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

# ஸ்ரீ.சு.க-ஜே.வி.பிக்கு இடையில் மீண்டும் கடும் கருத்து மோதல்

(கொழும்பு)

காடையர்களையும் ம.ஃ.பியாக்களையும் உள்ளடக்கியதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்று பகிரங்கமாகக் குற்றமசாட்டியுள்ளார் ஜே.வி.பி அமைச்சர் கே.டி.லால்கந்த.

தொழிலமைச்சு மற்றும் தொழிலாளர் யு,னியனுக்குப பொறுப்பாகவுள்ள இவ்வமைச்சர் சுதந்திரக்கட்சியின் தூண்டுதலில் இலங்கைத தொழிலாளர் காங்கிரஸின் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் நிலைப்பாடுகள் முள்ளெடுக்கப்படுவதாகவும் இதை நிறுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்காதவிடத்து, கூட்டணியிலிருந்து விலகவும் அரசைக் கவிழ்க்கவும் தாம் பின்னிற்கப் போவதில்லை என்றும் அறைகூவல் விடுத்துள்ளார்.

நாங்களே தொழிலாளர் ஐக்கியத்தைப் பேணுகிறோம். நாமே நாட்டை ஆளுகின்றோம். நம்மிடமே ஆளும் கட்சியின் அதிகாரமும் பலமும் இருக்கிறது என்று சவால் விடுத்துள்ள அமைச்சர் இதுவரை ஜே.வி.பி முன்னெடுத்த இரு தொழிலாளர் யூனியன் வேலை நிறுத்தங்களும் பெரும் வெற்றிபெற் றுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார். ஆளும் கட்சி உறுப்பினர் களும் சுதந்திரக் கட்சியின் தலைமையும் தங்களது கருத்தை ஏற்றுக்கொள்ளாது செயற்பட்டால், கடும் பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந)

# தென்பகுதி வாகனங்கள் வட பகுதிக்குக் கடத்தல்

(வவுனியா)

தென்னிலங்கையில் இருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான வாகனங்கள் வடபகுதிக்குக் கடத்தப்பட்டு வருவதாக வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் சிலர் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அதனை வடபகுதிக்குக் கொண்டு செல்கின்றார்கள். இதன் மூலமே கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுகின்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்பில் [illegible]யில் கடத்தி வரப்பட்ட ஒரு வாகனத்தினை வவு[illegible] குற்றத்தடுப்பு பொலிஸ் அதிகாரி பூலோகராசா த[illegible]மையிலான குழுவினர் கைப்பற்றியுள்ளனர். (ந-121)

## தினசரி தியானம்




### விவேகச் சிந்தனைகள்

எது உயர்ந்தது? அழியக்கூடிய இந்தப் பொருட்களின் பின்னால் ஓடுவதா... மாறாக ஒன்றை வழிபடுவதா? எது செயல்முறைக்கு உகந்தது? பொருட்களை அடைவதற்காக வாழ்க்கையின் எல்லா . சக்திகளையும் செலவழிப்பதும், அவற்றை அடையும் முன் மரணம் வந்துவிட அவற்றை எல்லாம் விட்டுப்போவதா? அல்லது என்றும் மாறாததை வழிபடுவதா?

சுவாமி விவேகானந்தர்





கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் மகளிர் படையணிகளின் ஆயுதக் கண்காட்சியிலிருந்து...

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் நாளையதினம் இந்தியா பயணம்

(கொழும்பு)

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தியாவிற்கு பயணமாகவுள்ளார்.

இந்தியாவிற்கு செல்லும் அவர் அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் கே.என். டிக்ஷித் ஆகியோர் உட்பட மற்றும் பல அரசியல் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள், தற்போது தடைப்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதில் எதிர்நோக்கப்படும் சிக்கல்கள் மற்றும் இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையிலான இருதரப்பு வர்த்தக பொருளாதார விடயங்கள் ஆகியன குறித்தும் அந்நாட்டுத் தலைவர்களுடன் ரணில் விக்கிரமசிங்க விரிவாக கலந்துரையாடவுள்ளார்.

(ற)

## இலவச மருத்துவ முகாம்

(பொன்னாலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் - யாழ்ப்பாணக் கிளை நடாத்தும் இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ச-49)

## பொதுக் கூட்டம்

(பொன்னாலை)

பொன்னாலை - ஸ்ரீகண்ணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு பாணாவெட்டி மத்திய மருந்தகத்திற்கு அண்மையிலிருக்கும் இடம்பெயர்ந்தோர் முகாமில் நடைபெறவுள்ளது.

(ச-44)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்குப் பாரிய அளவிலான வேலைத் திட்டம் ஒன்றை மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்த உள்ளது.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையில் இன்றும் நாளையும் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியிலுள்ள ஒக்ஸ்பாம் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. (ற)

# பொலநறுவையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

பொலன்நறுவை மாவட்ட எல்லைப்புற கிராமங்களில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்து நேற்று அந்த மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆசிரியர் உட்பட இரண்டு முஸ்லிம்கள் எல்லைப்புற கிராமமான கட்டுவன்வில்லில் ஆயுதக் குழுவொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கடந்த வியாழக்கிழமை இரவு முத்துக்கல்லில் தமிழரொருவர் கடத்தப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறான சம்பவங்களைக் கண்டித்தே பொலன்நறுவை மா[illegible] பள்ளிவாசல்களின் சம்மேளனத்தினால் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இதன் காரணமாக கதுருவெல, தம்பானை, கல்லால உட்பட அம் மாவட்டத்தின் சகல முஸ்லிம் பிரதேசங்களிலும் பாடசாலைகள் இயங்கவில்லை. சந்தைகள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தது.

(ச)

# திருமலையில் நேற்று ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அப் பிரதேசங்களின் வழமை நிலை மு[illegible] பாதிப்படைந்தது.

யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் இதுவரை அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படாமை, இனவாத சக்திகள் சமாதான முன்னெடுப்பிற்கு எதிராக திட்டமிட்டு மேற்கொண்டுவரும் சதி நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை ஜனாதிபதி விடுதலைப் புலிகள் தொடர்பாக ஆற்றிய உரை ஆகியவற்றை கண்டித்தே இக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினால் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தன்னாட்சி உள்ள இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 விடுதலைப் புலிப் போராளிகள் விடுவிக்கப்படவேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், புதிதாக விகாரை அமைக்கும் பணிகள் ஆகியன நிறுத்தப்பட வேண்டும் என்பன உட்பட சில கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. ஹர்த்தால் காரணமாக தமிழர் வாழும் பகுதிகளிலுள்ள அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் இயங்கவில்லை, அரச தனியார் அலுவலகங்கள் மூடப்பட்டன. வீதிகளில் வாகனப் போக்குவரத்துகளும் இடம்பெறவில்லை. வழமைக்கு மாறாக நேற்று விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பொலிஸாரும் படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். (ச-121)

## மாதாந்த...

கொள்ள இணக்கம் காணப்பட்டது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் 16 கூட்டமைப்பு எம்.பிக்களும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் எட்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

(ச)

## இலங்கையின்...

மருடனான சந்திப்பின்போது வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை போன்ற பல விடயங்களும் பேசப்பட்டன. பிரதமருடன் அமை[illegible]ர்கள் பலரும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

(த-6)

## ஊர்காவல் படையினர்...

இவர்களை விடுவிக்க திருகோணமலை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாகவும் மற்றும் திருகோணமலை மாவட்ட அரசியல் நிலை தொடர்பாகவும் ஆராய்வதற்கு அரச சமாதானப் பணிப்பாளர் தலைமையிலானகுழு நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தது.

திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த ஜயந்த தனபால யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் டெல்கே மற்றும் உறுப்பினர்களையும் சந்தித்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிப்பது தொடர்பாகவும் சமகால அரசியல் நிலைபரம் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

திருகோணமலையில் பூரண ஹர்த்தால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டதால் பல்வேறு பிரமுகர்களையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசமுடியாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து இராணுவத்தினரின் 22 ஆவது படையணி தலைமையகத்தில் வடக்கு கிழக்கு சிங்களசங்க பிரதிநிதிகளையும் சந்தித்து பேசியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை இராணுவத்தின் கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உட்பட மற்றும் படையதிகாரிகளையும் சந்தித்து பேசியுள்ளார். (ம)

## கிணற்றுக்குள்...

துடைய இரவிச்சந்திரன் கபிலேஸ் எனற பாலகனே மரணமானவராவர்.

குழந்தையின் சடலம் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு மரண விசாரணையின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-126-5)

## சுவீடன்குழு...

லெனார்ட் லெக், பீற்றர் றெஜின், மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஐ. கீதபொன்கலன் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

பின்னர் யாழ் அரச செயலகத்திற்குச் சென்று யாழ். மாவட்ட நிலைமை தொடர்பாக கலந்துரையாடினர்.

பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே. தவச்செல்வனையும் சந்தித்து கலந்துரையாடினர். நேற்று மாலை அவர்கள் கொழும்பு திரும்பினர். (ச-16-43)

## ஐ.தே.க. எம்.பிக்கள்...

களுக்கும் கட்சியின் தலைமைப் பீடம் கடிதம் அனுப்பியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரான எஸ்.பி. திஸநாயக்க கட்சியின் தலைமைப் பீடத்திற்கு எந்தவிதமான அறிவித்தலும் வழங்காமல் தனிப்பட்ட திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவுஸ்ரேலியா சென்றிருந்தமையினால் அவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இதற்காக தன்னை மன்னிக்குமாறு கோரி எஸ்.பி. திஸநாயக்கா கட்சித் தலைமைக்கு கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால், சஜித் பிரேமதாஸாவும் நவீன் திஸநாயக்காவும் எந்தவிதமான மன்னிப்புக் கடிதமும் இதுவரை வழங்கவில்லை.

இந் நிலையில் இம் மூன்று எம்.பிக்களுக்குமான ஒழுக்காற்று விசாரணைகளை கட்சியின் தலைமைப்பீடம் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை இவர்கள் மீது எந்தவிதமான விசாரணைகளும் மேற்கொள்ளக்கூடாது என்றும் இவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படக் கூடாது எனவும் கட்சியின் மீது அதிருப்தி கொண்டுள்ள எம்.பிக்கள் கட்சித் தலைமையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம)

## குளறுபடியில்...

ளும் அவ்வாறே செய்தனர். ஆயினும் பெறுபேறுகளை வாசித்துப் பார்த்தபோது 186 வாக்குகளே சட்டமூலத்திற்கு ஆதரவாகக் கிடைத்தன. ஆறு வாக்குகள் எதிராக போடப்பட்டிருந்தன. இ[illegible]வர் வாக்களிப்பில் கலந்துகொ[illegible]ள வில்லை என்றும் திரையில் காட்டப்பட்டது.

இந் நிலையில் மீண்டும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கலாம் என்று சபாநாயகர் கேட்டுக் கொண்டார். அதற்கிடையே எம்.பிக்கள் சபையில் இருந்து வெளியேறி விட்டனர். இதனால் பரீட்சார்த்த இலத்திரனியல் முறை வாக்கெடுப்பு பலிக்காமல் போனது.

(த)

## அடையாள அட்டை...

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதில் யாருக்கும் எந்த விதமான இடையூறும் இல்லை. சோதனை நிலையங்களிலும் ஏன் வெளிநாடு செ[illegible]வதற்கான பாஸ்போட் பெறுவதற்குக் கூட தேசிய அடையாள அட்டை தேவைதானே. கஜேந்திரன் எம்.பி. நாடாளுமன்ற அடையாள அட்டை உட்பட இரு அடையாள அட்டைகள் வைத்திருக்கிறார் தானே. ஏன் சாதாரண மக்கள் அடையாள அட்டை பெறுவதை எதிர்க்கவேண்டும் என கேள்வி எழுப்பினார்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ம.க. ஈழவேந்தன் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளேயின் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதனால் சபையில் சலசலப்பு ஏற்பட்டது. இந் நேரத்தில் கஜேந்திரன் எம்.பி. சபையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.